- இதில் ஓராண்டுக்குள் 602 பேரும், ஒன்று முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் 516 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
- இதில் அதிகபட்சமாக, பணியமர்த்தப்பட்ட ஓராண்டுக்குள் தமிழகத்தில் 134 பேரும், ஒன்று முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் மகாராஷ்டிரத்தில் 133 பேரும் இடமாற்றப்பட்டுள்ளனர்.
- டிஐஜி, ஐஜி, இணை மற்றும் கூடுதல் ஆணையர் பதவிகளில் உள்ளவர்களில் ஓராண்டுக்குள் 153 பேர், ஒன்று முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் 112 பேர் என மொத்தம் 265 பேர் (1.28 சதவீதம்) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
- இதில் அதிகபட்சமாக, பணியமர்த்தப்பட்ட ஓராண்டுக்குள் உத்தர பிரதேசத்தில் 15 பேரும், ஒன்று முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் மகாராஷ்டிரத்தில் 22 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
- ஜார்க்கண்ட் மற்றும் சில யூனியன் பிரதேசங்களின் புள்ளிவிவரங்கள் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தினமணிக்கு சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது

- திருவள்ளுவர் திருநாள் விருதுகள் மற்றும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளுக்கான விருதாளர்களை தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி அறிவித்துள்ளார்.
- தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது தினமணி நாளிதழுக்கும்
- தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் வார இதழ் விருது கல்கி வார இதழுக்கும்
- தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது செந்தமிழ் திங்களிதழுக்கும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருவள்ளுவர் விருது, சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள் அறிவிப்பு

- 2021ம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது – முனைவர் வைகைச்செல்வன்
- 2020ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது – அ. தமிழ்மகன் உசேன்
- அண்ணல் அம்பேத்கர் விருது – வரகூர் அ. அருணாச்சலம்
- பேரறிஞர் அண்ணா விருது – அமரர் கடம்பூர் எம்.ஆர். ஜனார்த்தனன்
- முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது – முனைவர் வீ. சேதுராமலிங்கம்
- பெருந்தலைவர் காமராசர் விருது – முனைவர் ச. தேவராஜ்
- மகாகவி பாரதியார் விருது – கவிஞர் பூவை செங்குட்டுவன்
- பாவேந்தர் பாரதிதாசன் விருது – பாடலாசிரியர் அறிவுமதி
- முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது – முனைவர் வீ. சேதுராமலிங்கம்

- தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது – வி.என். சாமி
- சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருது – 2020ம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருது வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம்
- கபிலர் விருது – செ. ஏழுமலை
- கம்பர் விருது – மருத்துவர் எச்.வி. ஹண்டே
- சொல்லின் செல்வர் விருது – நாகை முகுந்தன்
- உமறுப்புலவர் விருது – ம. அ. சையத் அசன் (எ) பாரிதாசன்
- ஜி.யு.போப் விருது – ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த முனைவர் உல்ரீகே நிகோலசு
- இளங்கோவடிகள் விருது – மா. வயித்தியலிங்கன்
- அம்மா இலக்கிய விருது – முனைவர் தி. மகாலட்சுமி
- சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் விருது – ஆ. அழகேசன்
- மறைமலையடிகளார் விருது – மறை. தி. தாயுமானவன்
- அயோத்திதாசப் பண்டிதர் விருது – முனைவர் கோ.ப. செல்லம்மாள்
- அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது – முனைவர் ஊரன் அடிகள்
- காரைக்கால் அம்மையார் விருது – முனைவர் மோ. ஞானப்பூங்கோதை
- விருது பெறுவோர் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகையாக 1 லட்சம் ரூபாயும், தமிழ்த்தாய் விருது பெறும் தமிழ் அமைப்பிற்கு 5 லட்சம் ரூபாயும், தமிழ்ச் செம்மல் விருது பெறும் விருதாளர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25 ஆயிரமும் வழங்கப்படும்.

**2020–ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருதுகள் அறிவிப்பு**

- தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளது.
- இதில், 2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்ச் செம்மல் விருது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் அறிவிக்கப்பட்டுள்ளார்.
- சென்னை – ஜெ.வா. கருப்புசாமி
- திருவள்ளூர் – வேணு புருஷோத்தமன்
- காஞ்சிபுரம் – முனைவர் சு. சதாசிவம்
- வேலூர் – மருத்துவர். சே. அக்பர் கவுஸர்
- கிருஷ்ணகிரி – மா. முருககுமரன்
- திருவண்ணாமலை – முனைவர் இரா. வெங்கடேசன்
- விழுப்புரம் – பரிக்கல் ந. சந்திரன்
- கடலூர் – முனைவர் ஜா. இராஜா
- பெரம்பலூர் – முனைவர் அ. செந்தில்குமார் (எ) தமிழ்க்குமரன்
- அரியலூர் – முனைவர் சா. சிற்றரசு
- சேலம் – கவிஞர் பொன்.சந்திரன்
- தருமபுரி – பாவலர் பெரு.முல்லையரசு
- நாமக்கல் – திரு. ப. முத்துசாமி
- ஈரோடு – முனைவர் கா. செங்கோட்டையன்
- கரூர் – சி. கார்த்திகா
- கோயம்புத்தூர் – எம்.ஜி. அன்வர் பாட்சா
- திருப்பூர் – முனைவர் துரை அங்குசாமி

- நீலகிரி – ம. பிரபு
- திருச்சிராப்பள்ளி – சோமவீரப்பன்
- புதுக்கோட்டை – ஜீவி (ஜீ. வெங்கட்ராமன்)
- சிவகங்கை – இரா. சேதுராமன்
- தஞ்சாவூர் – திரு. பழ. மாறவர்மன்
- திருவாரூர் – இராம.வேல்முருகன்
- நாகப்பட்டினம் – மா. கோபால்சாமி
- இராமநாதபுரம் – ஆ. முனியராஜ்
- மதுரை – முனைவர் போ.சத்தியமூர்த்தி
- திண்டுக்கல் – தா. தியாகராசன்
- தேனி – த. கருணைச்சாமி
- விருதுநகர் – கவிஞர் சுரா (எ) சு. இராமச்சந்திரன்
- திருநெல்வேலி – வீ. செந்தில் நாயகம்
- தூத்துக்குடி – ச. காமராசு (முத்தாலங்குறிச்சி காமராசு)
- கன்னியாகுமரி – பா. இலாசர் (முளங்குழி பா. இலாசர்)
- திருப்பத்தூர் – முனைவர் ச. சரவணன்
- செங்கல்பட்டு – நந்திவரம் பா. சம்பத் குமார்
- இராணிப்பேட்டை – கவிஞர் பனப்பாக்கம் கே.சுகுமார்
- தென்காசி – மு. நாராயணன்
- கள்ளக்குறிச்சி – சி. உதியன்
- மயிலாடுதுறை – துரை குணசேகரன்

## ஜி7 மாநாடு: பிரதமர் மோடிக்கு போரிஸ் ஜான்சன் அழைப்பு

- ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஜி7 மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரிட்டனுக்கு வருகை தருமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் பிரதமர் போரிஸ் ஜான்சன் அழைப்பு விடுத்துள்ளார்.
- அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி7 அமைப்பின் மாநாடானது, வரும் ஜூன் மாதம் 11–ஆம் தேதி முதல் 13–ஆம் தேதி வரை பிரிட்டனின் கடற்கரை நகரான கார்ன்வாலில் நடைபெறவுள்ளது.
- அந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்குமாறு இந்தியா, தென் கொரியா, ஆஸ்திரேலியா நாடுகளுக்கு பிரிட்டன் அழைப்பு விடுத்திருந்தது.
- ஆகஸ்ட் 2019 இல் பிரான்சில் பியாரிட்ஸில் நடைபெற்ற ஜி –7 உச்சி மாநாட்டில் மோடி கலந்து கொண்டார், மேலும் அமெரிக்கா நடத்திய 2020 உச்சி மாநாட்டிற்கும் அழைக்கப்பட்டார்.
- இது மோடியின் இரண்டாவது ஜி –7 உச்சி மாநாடு என்று எதிர்பார்க்கப்படுகிறது; அவரது முன்னோடி மன்மோகன் சிங் ஜி –8 உச்சி மாநாட்டில் (இது ஜி –8 இலிருந்து 2014 ல் ரஷ்யாவை வெளியேற்றியதன் மூலம் ஜி –7 ஆனது) 2005 மற்றும் 2009 க்கு இடையில் ஐந்து முறை கலந்து கொண்டுள்ளார்.

## ஆயுஷ்மான் சிஏபிஎஃப் திட்டம்: அமித் ஷா தொடக்கி வைக்கிறார்

- அஸ்ஸாமில் மத்திய துணை ராணுவப் படையினருக்கான ஆயுஷ்மான் சுகாதாரத் திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடக்கி வைக்கிறார்.

- நாடு முழுவதும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டமான ஏபி பிஎம்—ஜேஏஓய் எனப்படும் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை கடந்த 2018—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

**ஜெயலலிதா நினைவிடம்: ஜன.27—இல் முதல்வர் திறப்பு**

- பீனிக்ஸ் பறவை மாதிரியின் வடிவத்தில் கட்டப்பட்டு வரும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடத்தை முதல்வர் பழனிசாமி வரும் 27—ஆம் தேதி திறந்து வைக்கிறார்.
- **2 ஆண்டுகளில் பணி நிறைவு:** முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கடந்த 2016—ஆம் ஆண்டு டிசம்பர் 5—ஆம் தேதி மரணம் அடைந்தார்.
- அவருக்கு பிரமாண்டமான நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று சட்டப் பேரவையில் கடந்த 2017—ஆம் ஆண்டு ஜூன் 28—ஆம் தேதி முதல்வர் பழனிசாமி அறிவிப்பு செய்தார்.
- **நிதி எவ்வளவு?** முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவிடத்தை அமைப்பதற்கு முதலில் ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டது.
- இந்த நிதி அதிகரிக்கப்பட்டு **ரூ.79 கோடியாக உயர்ந்தப்பட்டது.**
- பல்வேறு காலகட்டங்களில் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு விவரங்கள்:
- **2016 டிசம்பர் 7**: ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு.
- **2018 ஜனவரி 10**: கூடுதலாக ரூ.35.80 கோடி ஒதுக்கீடு.
- **2020 ஜூலை 27**: நினைவிடப் பணிக்காக மேலும் ரூ.7 கோடியே 16 லட்சத்து 14, 524 ஒதுக்கீடு.
- **2020 நவம்பர் 13**: கூடுதலாக ரூ.21 கோடியே 79 லட்சத்து 45 ஆயிரம் ஒதுக்கீடு.

**குடியரசு தின விழாவில் மாமல்லபுரம் சிற்பக்கலையை தத்ரூபமாக காட்டும் தமிழக அலங்கார ஊர்தி**

- தில்லியில் நடைபெறும் 71 — வது குடியரசு தின அணிவகுப்பில் தமிழக அரசின் அலங்கார ஊர்தி தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்த ஆண்டும் இடம் பெறுகிறது.
- மாமல்லபுரத்தின் சிற்பக் கலையை தத்துரூபமாக காட்டும் அலங்கார ஊர்தி இம்முறை பங்கேற்கிறது.
- தமிழக ஊர்தியின் இருபுறமும் பரதநாட்டியமும், நாதஸ்வர இசை நிகழ்ச்சியும் இடம் பெறுகிறது. பாரதியின் 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற பாட்டுடன் 4 பரத நாட்டிய கலைஞர்கள், 8 நாதஸ்வரம் தவில் கலைஞர்களுடன் நாட்டிய நிகழ்ச்சிகளோடு தமிழக அலங்கார ஊர்தி பங்கேற்க இருக்கிறது.
- பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் 10 பேர் கொண்ட குழு எட்டு அடுக்கு முறையில் அலங்கார ஊர்திகளை தேர்வு செய்கிறது.

**அல்வா பூஜையுடன் தொடங்கிய பட்ஜெட் தயாரிப்புப் பணி: செல்லிடப்பேசி செயலியும் அறிமுகம்**

- பாராளுமன்ற விவகார அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி.
- 18 அமர்வுகளைக் கொண்ட மழைக்கால அமர்வில் 10 பேரை மட்டுமே நிர்வகிக்க முடியும்.
- கரோனா பரவலை தடுக்கும் விதமாக நிகழாண்டு பட்ஜெட் ஆவணங்களை காகிதத்தில் அச்சடிக்க வேண்டாமென மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இது பிரதமர் மோடி தலைமையிலான அரசு தாக்கல் செய்யவுள்ள 8—ஆவது பட்ஜெட் ஆகும்.

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 3—ஆவது முறையாக முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்யவுள்ளார்.
- சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதல்முறையாக நாட்டின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 7.7% சரிவை சந்திக்கும் என மத்திய அரசு மதிப்பிட்டுள்ள நிலையில், இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ளது.
- நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் அல்வா தயாரித்து மத்திய நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) தயாரிப்பு பணியை இன்று தொடங்கி வைத்தார்.
- பாராளுமன்றத்தில் ஆண்டுதோறும் மத்திய நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) சமர்ப்பிப்பதற்கு முன்னர் அச்சடிக்கும் வேலை தொடங்கும் போது அல்வா எனும் இனிப்பு பொருள் தயாரித்து ஊழியர்களுக்கு வழங்குவர். பட்ஜெட் அச்சிடும் ஊழியர்களுக்கு நிதிமந்திரி அல்வா கிண்டி வழங்குவது வழக்கம்.
- அந்த வகையில், நிதிமந்திரி நிர்மலா சீதாராமன் இன்று அல்வா கிண்டி 2021—22 ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் தயாரிப்பு பணிகளை தொடங்கி வைத்தார்.
- நிதியமைச்சகத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியில் இணைமந்திரி அனுராக் தாக்கூர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்த நிதியாண்டுக்கான பட்ஜெட் பிப்ரவரி 1—ம் தேதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது.
- இந்த நிகழ்வில், மத்திய பட்ஜெட் ஆவணங்கள், மானியக் கோரிக்கைகள், வரி விதிப்பு மற்றும் வரிச் சலுகைகள் இடம்பெறும் நிதி மசோதா உள்ளிட்ட 14 ஆவணங்களைப் பெறும் வகையில் ‘யூனியன் பட்ஜெட் ஆப்’ என்ற செயலியை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிமுகம் செய்துவைத்தார். அரசமைப்புச் சட்ட வரம்புக்கு உள்பட்டு இந்த செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

**தேசிய பெண் குழந்தைகள் தினக் கொண்டாட்டம்**

- ஜனவரி 24 — இந்தியாவில் தேசிய பெண் குழந்தை தினம்
- அரியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மாவட்டக் குழந்தைகள் கடத்தல் தடுப்புப் பிரிவு சார்பில், தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது.
- இந்நிகழ்வில், பெண் குழந்தைகள் குறித்த விழிப்புணர்வும், கேடயம் திட்டம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- கடந்த 12 நாள்களில் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக 4 ஆயிரம் செல்வமகள் சேமிப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் சி. செல்லையா தெரிவித்தார்.

**மின்னணு வாக்காளர் அடையாள அட்டை: இன்று அறிமுகம் செய்கிறது தேர்தல் ஆணையம்**

- தமிழகம், கேரளா, அசாம், மேற்கு வங்காளம் மற்றும் புதுச்சேரி ஆகிய 5 மாநிலங்களுக்கு இன்னும் 2 மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகளை இந்திய தேர்தல் கமிஷன் ஏற்கனவே தொடங்கி விட்டது.
- தேசிய வாக்காளர் தினத்தையொட்டி மின்னணு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இந்திய தலைமை தேர்தல் ஆணையம் அறிமுகம் செய்கிறது.
- இதனிடையே இந்தியா முழுவதும் இன்று 11ஆவது தேசிய வாக்காளர் தினம் கடைபிடிக்கப்படுவதையொட்டி, தலைநகர் டெல்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் காணொளி காட்சி மூலம் கலந்துகொள்ள இருக்கிறார். இந்நிகழ்ச்சியில் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளை

வழங்க இருக்கும் குடியரசுத் தலைவர், "ஹலோ வாக்காளர்கள்" என்ற பெயரில் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதள ரேடியோவையும் தொடங்கி வைக்கிறார்.


**தேசிய வாக்காளர் தினம்: இளம் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குகிறார் ஆளுநர் புரோஹித்**

- தேசிய வாக்காளர் தினம் ஜன. 25 கொண்டாடப்பட உள்ளது. மாநில அளவிலான விழா, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தலைமையில் சென்னையில் நடைபெற உள்ளது.
- இந்தியாவில் தேர்தல் ஆணையம் கடந்த 1950—ஆம் ஆண்டு ஜனவரி 25—ஆம் தேதியன்று அமைக்கப்பட்டது.
- **வாக்காளர்கள் விழிப்புணர்வு:** ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தலைமையில் நடைபெறும் விழாவில், அனைவரும் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியை ஏற்றுக் கொள்ள உள்ளனர். பல்வேறு விருதுகளை வழங்கியும், முதல் முறையாக பட்டியலில் பெயர்களை இணைத்த இளம் வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டையையும் ஆளுநர் புரோஹித் அளிக்க உள்ளார்.
- 'எந்தவொரு வாக்காளரும் விடுபட்டு விடக் கூடாது' என்பதே கடந்த ஆண்டின் தாரக மந்திரமாக இருந்தது. 'வாக்காளர்களை அதிகாரம், விழிப்பு, தகவல்களை அறிந்தவர்களாக மாற்றுவோம்' என்பதே நிகழாண்டின் கருப்பொருளாக உள்ளது.


**தமிழகத்தில் பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டோர் பட்டியல்**



### பத்ம விபூஷன்




### பத்ம பூஷன்




### ஆஸ்கார் விருது போட்டிக்கு செல்லும் சூர்யாவின் சூரரைப்போற்று

- ஆஸ்கார் போட்டிக்கான பொதுப்பிரிவில் சூரரைப்போற்று படம் சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த இயக்குனர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த கதாசிரியர் உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் போட்டியிடுகிறது.
- ஏற்கனவே இந்த படம் கோல்டன் குளோப் விருதுக்கான திரையிடலுக்கும் தேர்வானது நினைவுகூரத்தக்கது.

### தலைமை நீதிபதி பாப்டே உச்ச நீதிமன்றத்தின் முதல் அமர்வை நினைவு கூர்ந்தார்

- எழுபத்தொரு ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய உச்ச நீதிமன்றம் ஜனவரி 28 அன்று பாராளுமன்ற வளாகத்தில் உள்ள நீதிமன்ற அறையில் புதிய அரசியலமைப்பின் கீழ் முதல் முறையாக தனது இடத்தைப் பிடித்தது.

- இந்தியாவின் தலைமை நீதிபதி ஷரத் ஏ. போப்டே நீதிமன்றத்தின் தொடக்க அமர்வை அட்டர்னி ஜெனரல் கே.கே. வேணுகோபால் மற்றும் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா உடன் உச்ச நீதிமன்றத்தின் முதல் அமர்வை நினைவு கூர்ந்தார்
- "1950ல் உச்சநீதிமன்றத்தின் முதல் அமர்வு நடந்த நாள் ஜனவரி 28. 13 உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் கலந்து கொண்டனர்.

**மகாத்மா காந்தியின் 73—வது நினைவு தினம்**

- காந்தி 30 ஜனவரி 1948 இல் சுடப்பட்டார்.
- மகாத்மா காந்தியின் 73—வது நினைவு தினம் நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி டெல்லி ராஜ்காட்டிலுள்ள அவரது நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.
- ராஜ்காட்டில் காந்தியின் விருப்பமான பஜனை பாடலான 'ரகுபதி ராகவ ராஜாராம்' பாடல் ஒலிபரப்பப்பட்டது.

ARUL IAS ACADEMY

# 4.முக்கிய நபர்

## 4 உயர் நீதிமன்றங்களுக்கான புதிய தலைமை நீதிபதிகள்

- மெட்ராஸ், ஒடிசா, தெலுங்கானா மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகியவற்றின் உயர் நீதிமன்றங்களுக்கான புதிய தலைமை நீதிபதிகளை சட்ட அமைச்சகம் அறிவித்தது.
- தெலுங்கானா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஹிமா கோலி
- முரளிதரை ஒரிசா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக உயர்த்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- ஜம்மு—காஷ்மீர் தலைமை நீதிபதியாக பங்கஜ் மிதல்.
- தற்போது கல்கத்தா ஐகோர்ட்டின் நீதிபதியாக இருக்கும் சஞ்சிப் பானர்ஜி இப்போது மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக உயர்த்தப்பட்டுள்ளார்.

## ரயில்வே வாரியத்தின் புதிய தலைவராக சுனீத் சர்மா பொறுப்பேற்பு

- ரயில்வே வாரியத்தின் புதிய தலைவராகவும் மற்றும் தலைமை செயல் அதிகாரியாகவும் சுனீத் சர்மா (1.1.2021) பொறுப்பேற்றார்
- இவர் அலுவல் சார்ந்து இந்திய அரசின் முதன்மைச் செயலாளராகவும் பணியாற்றுவார்.
- இதற்கு முன்பாக, சுனீத் சர்மா, கிழக்கு ரயில்வே பொது மேலாளராக பணியாற்றினார்.

## ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவருக்கு விருது : பிரதமர் வழங்கினார்

- ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தைச் சேர்ந்த 65 வயது முதியவர், பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் சிறந்த வீடு கட்டுமான விருதைப் பெற்றுள்ளார்.
- பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (PMOY) என்பது நகர்ப்புற ஏழைகளுக்கான வீடு கட்டும் திட்டமாகும்.
- 2015—ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வீடு கட்டுவதற்காக மத்திய அரசு சார்பில் ரூ.1.66 லட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.
- இந்த விருதுக்காக நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 88 பயனாளிகளில் மூவர் ஜம்மு காஷ்மீரை சேர்ந்தவர்கள்.
- தோடா மாவட்டம் பதர்வா பகுதியைச் சேர்ந்த 65 வயது முதியவரான அப்துல் லத்தீப் கனய் என்பவரும் தோடா துணை ஆணையர் சாகர் தத்தாராய், பதர்வா நகராட்சி நிர்வாக அதிகாரி யூசுஃப்—உல்—உமர் உள்ளிட்டோரும் இந்த விருதைப் பெற்றுக் கொண்டனர்.
- இத்திட்டத்தின் கீழ் சிறப்பாக வீட்டை கட்டியதற்கான விருதுகளை பிரதமர் நரேந்திர மோடி, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி ஆகியோர் காணொலிக் காட்சி மூலம் வழங்கினர்.

## புகழ்பெற்ற எழுத்தாளர் ஆ. மாதவன் காலமானார்.

- 87 வயதான மாதவன் (05.01.2021) காலமானார். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த செல்லம்மாள் மற்றும் அவுதாய்நாயகம் ஆகியோருக்குப் பிறந்தவர் இவர் திருவனந்தபுரத்தில் வளர்ந்தவர்.

- எழுத்தாளர் ஆ.மாதவனின் முதல் நாவலான புனலும் மணலும், 1974—களில் Readers Circle மூலம் வெளியிடப்பட்டது .கிருஷ்ணப் பருந்து இவருடைய புகழ்பெற்ற நாவல் . தூவானம் என்றொரு குறுநாவலும் எழுதியுள்ளார்.
- 2015 ஆம் ஆண்டு இலக்கியச்சுவடுகள் நூலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றார்.
- மலையாளத்திலிருந்து இரு நாவல்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

**பிரதமர் பதவியை உழைப்பால் அடைந்தவர் நரேந்திர மோடி: சுய சரிதத்தில் பிரணாப் முகர்ஜி பாராட்டு**

- மறைந்த முன்னாள் ஜனாதிபதியும், மூத்த காங்கிரஸ் தலைவருமான, பிரணாப் முகர்ஜி, 'The Presidential Years, 2012 – 2017' என்ற தலைப்பில், தன் பதவிக்காலம் குறித்த அனுபவத்தை புத்தகமாக எழுதினார்.
- அந்த நூல் 05.01.2021 அன்று வெளியானது
- கடந்த, 2014 லோக்சபா தேர்தல் முடிவுகள், இரண்டு காரணங்களுக்காக, வரலாற்று சிறப்புமிக்கதாக கருதப்படுகிறது.
- முதலாவது, 30 ஆண்டுகளுக்குப் பின், தேர்தலில் தீர்க்கமான முடிவினை மக்கள் வழங்கினர்.
- இரண்டாவது, முதல்முறையாக, லோக்சபாவில் தனிப்பெரும்பான்மை கொண்ட கட்சியாக, பா.ஜ.க, வெற்றி பெற்றது.

**புடவை வடிவமைப்பில் பல புதுமைகளை புகுத்திய பிரபல ஆடை வடிவமைப்பாளர் சத்ய பால், கோவையில் காலமானார்**

- அவர் இந்தியாவின் முதல் boutique மற்றும் designer label அறிமுகப்படுத்தினார்.
- சத்ய பால், சமகால பெண்களுக்கான புடவையை மீண்டும் கண்டுபிடித்த வடிவமைப்பாளராக அறியப்படுகிறார்.
- சத்ய பால், பிப்ரவரி 2, 1942 இல் பிறந்தார்.
- 1980—ஆம் ஆண்டில், இந்தியாவில் முதல் பெண்களின் அழகு சாதனக் கடை, L'Affaire-ல் மற்றும் 1986 ஆம் ஆண்டில், இந்தியாவின் முதல் designer label ஐ தனது மகனுடன் தொடங்கினார்.

**U.S. இராணுவத்தின் முதல் தலைமை தகவல் அதிகாரி (CIO): இந்திய—அமெரிக்கர்**

- ஜூலை 2020 இல் பென்டகன் இந்த பொறுப்பை உருவாக்கிய பின்னர் யு.எஸ். ராணுவத்தின் முதல் தலைமை தகவல் அதிகாரியாக (CIO) ராஜ் ஐயர் பொறுப்பேற்றார்.
- அவர் மின் பொறியியல் படிப்பில் PhD முடித்துள்ளார்.
- டாக்டர் ஐயர் U.S. இராணுவத்தின் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக ஆண்டுக்கு 16 பில்லியன் டாலர் பட்ஜெட்டை மேற்பார்வையிடுவார்.
- 100 நாடுகளில் 15,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் இராணுவ வீரர்கள் அவருக்கு கீழ் பணிபுரிகின்றனர்.

### இந்தியா போஸ்ட்பேமெண்ட் வங்கி தலைவராக வெங்கட்ராமு நியமனம்


- இப்போது ‘எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ்’ வங்கியில் தலைமை மின்னணுத் துறை அதிகாரியாக உள்ளார்.
- இந்தியா போஸ்ட்பேமெண்ட் வங்கியின் மேலாண்மை இயக்குநர் (M.D) மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக (CEO) ஜெ.வெங்கட்ராமு நியமிக்கப்பட்டார்.
- இந்தியா போஸ்ட் பேமெண்ட் வங்கியை கடந்த 2018—ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- அஞ்சல் துறை மூலம் நடத்தப்படும் இந்த பேமெண்ட் வங்கிக் கணக்கில் அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரையிலே சேமிக்க முடியும்.

### காலமானார் கே.ரங்கநாதன்

- தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தில் 40 ஆண்டுகள் பணியாற்றிய கே.ரங்கநாதன் (92) காலமானார்.
- 1968—ஆம் ஆண்டில் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் சென்னை அலுவலகத்தில் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்ததார் கே.ரங்கநாதன்.
- தனது 78—ஆவது வயதில் பணி ஓய்வு பெற்றார்.

### இந்திய—அமெரிக்க எழுத்தாளர் வேத் மேத்தா மறைவு

- இந்திய—அமெரிக்க எழுத்தாளர் வேத் மேத்தா ஜனவரி 9 மன்ஹாட்டனில் உள்ள அவரது வீட்டில் காலமானார். அவருக்கு வயது 86.
- ஒருங்கிணைந்த பஞ்சாபில் கடந்த 1934—ஆம் ஆண்டு பிறந்த வேத் மேத்தா, 3 வயதிலேயே காண்பார்வையை இழந்தார்.




- அமெரிக்காவில் பார்வையற்றோருக்கான பள்ளியில் பயின்ற பிறகு அவர் பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோர்டு ல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்றார்.

- காட்சிகளை விவரிக்கும் தனித்துவமான ஆங்கில நடைக்கு மிகவும் புகழப்பட்ட வேத் மேத்தா, இந்திய கலை, அரசியலை மையப்படுத்தி எழுதிய 12 நூல்கள் கொண்ட தொகுப்பு, அவரது சுயசரிதையாகவும், இந்தியாவின் பல பரிமாணங்களை வெளிப்படுத்தும் படைப்பாகவும் பார்க்கப்படுகிறது.

## எழுத்தாளர் சோலை சுந்தரபெருமாள் மறைவு

- திருவாரூர் மாவட்டம், அம்மையப்பனை அடுத்த காவனூரில் வசித்துவந்த மூத்த எழுத்தாளரும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் – கலைஞர்கள் சங்கத்தின் மாநிலக் குழு சிறப்பு அழைப்பாளருமான சோலை சுந்தரபெருமாள் (70) உடல் நலக்குறைவால் (ஜன. 12) காலமானார்.
- வெண்மணி சம்பவம் தொடர்பாக இவர் எழுதிய செந்நெல் நாவல் இலக்கியத் துறையில் மிகவும் பாராட்டுப் பெற்றது. மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் இந்த நாவல் மொழிபெயர்க்கப்பட்டது.
- இவரது 'செந்நெல்', 'அகமும் புறமும்', 'நஞ்சை மனிதர்கள்', 'மருத நிலமும் பட்டாம் பூச்சிகளும்', 'ஒரே ஒருஊர்ல', 'தப்பாட்டம்', 'பெருந்திணை,' 'குருமார்கள்', 'அடிக்கல்', 'மரக்கால்', 'கப்பல்காரர் வீடு', 'பால்கட்டு' போன்ற பல படைப்புகளில் வேளாண் குடிமக்களின் மண் சார்ந்த வாழ்வும், போராட்டமும் ஊடாடும் பேசுபொருளாக இருக்கும்.

## ஐ.நா. தலைமைப் பொறுப்புக்கு 2–ஆவது முறையாகப் போட்டி

- ஐ.நா. அமைப்பின் பொதுச் செயலர் பதவிக்கு மீண்டும் போட்டியிட அந்தோனியோ குத்தேரசு முடிவு செய்துள்ளார்.
- ஐ.நா. பொதுச் சபை தலைவர் வோல்கான் போஸ்கிர்.
- கடந்த 2017–ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் ஐ.நா. பொதுச் செயலராக இருந்து வரும் குத்தேரசு–ன் பதவிக் காலம் வரும் டிசம்பர் 31 உடன் நிறைவடைகிறது.

## டெல்லியில் கோவிட் –19 தடுப்பூசி பெற்ற முதல் இந்தியர் மணீஷ் குமார்

- தலைநகர் தில்லியில் முதலாவது தடுப்பூசி மணீஷ் குமார்(34) என்ற துப்புரவுத் தொழிலாளிக்கு செலுத்தப்பட்டது
- தில்லியில், மத்திய அரசின் ஆளுகைக்கு கீழுள்ள எய்ம்ஸ் உள்ளிட்ட 81 இடங்களில் தடுப்பூசி போடப்பட்டது.
- 'பாரத் பயோடெக் நிறுவனத்தால் முழுக்க முழுக்க நாட்டில் தயாரிக்கப்பட்ட கோவாக்சின், ஆக்ஸ்போர்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டகோவிஷீல்டு ஆகிய இரண்டு தடுப்பூசிகள் போடப்படுகின்றன.
- கோவாக்சின், கோவிஷீல்ட் ஆகிய இரண்டு தடுப்பூசிகளும் பாதுகாப்பானவை.

## சுதந்திர தேவி சிலையை விட ஒற்றுமை சிலைக்கு அதிக சுற்றுலாப் பயணிகள்: பிரதமர் மோடி


- வல்லபாய் படேல் / பிறந்த தேதி 31 அக்டோபர் 1875.
- சர்தார் வல்லபாய் படேலின் 143 வது பிறந்த ஆண்டு விழாவை முன்னிட்டு, உலகின் மிக உயரமானதாகக் கருதப்படும் ஒற்றுமை சிலையை பிரதமர் மோடி 2018 அக்டோபரில் குஜராத்தின் கேவாடியா பகுதியில் நர்மதை நதிக்கரையில் திறந்து வைத்தார்.
- இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திறக்கப்பட்டதிலிருந்து கிட்டத்தட்ட 50 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

**பிரபல ஹிந்துஸ்தானி இசையமைப்பாளர் குலாம் முஸ்தபா கான் காலமானார்**

- பிரபல ஹிந்துஸ்தானி இசையமைப்பாளரும் பத்ம விபூஷண் விருது பெற்றவருமான உஸ்தாத் குலாம் முஸ்தபா கான் மும்பையில் காலமானார்.
- குலாம் முஸ்தபா கான் மார்ச் 3, 1931 அன்று உத்தரபிரதேசத்தின் படாயூனில் பிறந்தார்.
- 1991–இல் பத்மஸ்ரீ விருதையும், 2006–இல் பத்ம பூஷண் விருதையும், 2018–இல் பத்ம விபூஷண் விருதையும் பெற்றுள்ளார். 2003–இல் சங்கீத நாடக அகாதெமி விருதையும் பெற்றுள்ளார்.

**அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தலைவர் டாக்டர் சாந்தா மறைவு**

- புற்றுநோய் பராமரிப்பில் புரட்சியை ஏற்படுத்திய இந்தியாவின் மருத்துவ முன்னோடி டாக்டர் வி சாந்தா 93 வயதில் காலமானார்
- 1954–இல் இந்திய மகளிர் சங்கத்துடன் (WIA) இணைந்து அரசு சாரா மருத்துவமனையாக அடையாறு புற்றுநோய் மருத்துவமனை பதிவு செய்யப்பட்டு, கடந்த 67 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டியின் அழைப்பை ஏற்று 1954 முதல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் டாக்டர் வி.சாந்தா பணியாற்றத் தொடங்கினார்.
- டாக்டர் சாந்தா பத்மஸ்ரீ(1986), பத்ம பூசண்(2006) பத்ம விபூஷன்(2016) மற்றும் மதிப்புமிக்க ரமோன் மக்சேசே விருது(2005) உட்பட பல மதிப்புமிக்க விருதுகளை வென்றார்.
- டாக்டர் சாந்தா மார்ச் 2005 வரை உலக சுகாதார நிறுவனத்தின் புற்றுநோய் பராமரிப்பு ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகவும் பணியாற்றினார்.
- டாக்டர் சாந்தா புகழ்பெற்ற விஞ்ஞானிகளின் குடும்பத்திலிருந்து வந்தவர், இயற்பியலில் இரண்டு நோபல் பரிசு பெற்றவர்கள் உட்பட – சி.வி. ராமன் மற்றும் எஸ்.சந்திரசேகர்.
- **அரசு மரியாதையுடன்** : தமிழக முதல்வர் பழனிசாமி அறிவித்தபடி, 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் சாந்தாவின் உடல் தகனம் செய்யப்பட்டது.



**பெண்களுக்கு ஒரு முன்மாதிரி என்று ஆளுநர் கூறுகிறார்**

- ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தமது ட்விட்டர் பதிவில், புற்றுநோய் சிகிச்சைக்காக மனிதநேயத்துடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்றும், நோயாளிகளை அவர் கருணையுடன் கவனித்துக் கொண்டதை நினைவுகூர்வதாகவும் கூறினார்.
- உடல்நலக்குறைவால் காலமான அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் தலைவர் சாந்தாவின் உடல், காவல்துறை மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

**டாக்டர் சாந்தா தி இந்துவுடன் ஒரு சிறப்பு வெளியீட்டில் பணிபுரிந்தார்**

- டாக்டர் சாந்தா தி இந்துவுடன் 'புற்றுநோய் நிறுவனம் குறித்த சிறப்பு தொகுதி' ஒன்றில் பணிபுரிந்து வந்தார்.
- டிசம்பர் 28, 2020 அன்று, தமிழக புற்றுநோய் பதிவு திட்ட அறிக்கை 2020ஐ வெளியிடுவதில் பங்கேற்றார், இது புற்றுநோய் நிறுவனம் மற்றும் சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை,.

**நேதாஜி பிறந்த தினம் தேசிய வலிமை தினமாக கடைபிடிக்கப்படும்: மத்திய அரசு அறிவிப்பு**

- நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் பிறந்த தினம் ஆண்டுதோறும் தேசிய வலிமை தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று மத்திய கலாசார துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் அறிவித்தார்.
- நேதாஜி சுபாஷ்சந்திர போஸின் பிறந்த தினமான ஜனவரி 23—ஆம் தேதி ஆண்டுதோறும் தேசிய வலிமை தினமாக கடைப்பிடிக்கப்படும். இந்த ஆண்டு அவரின் 125—ஆவது பிறந்த தினம் கொண்டாடப்படவுள்ளது.
- நேதாஜி பிறந்த தினத்தன்று அவர் பிறந்த இடமான ஒடிஸா மாநிலம், கட்டக்கில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பங்கேற்கவுள்ளார்.

**அமெரிக்க அதிபரானார் ஜோ பைடன், துணை அதிபரானார் கமலா ஹாரிஸ்**

- துணை அதிபராக, கமலா ஹாரிஸ் நிறுத்தப்பட்டார், ஆப்ரிக்கா மற்றும் இந்தியாவை பூர்வீகமாக உடைய ஒரு பெண் பதவியேற்பது, இதுவே முதல் முறை.
- முன்னாள் அதிபர்களான — பராக் ஒபாமா, ஜார்ஜ் டபிள்யூ. புஷ், பில் கிளிண்டன் மற்றும் அவர்களது துணைவர்கள் — வெளிச்செல்லும் துணைத் தலைவர் மைக் பென்ஸ் ஆகியோரும் இருந்தனர்

**குரு கோவிந்த் சிங் பிறந்த தினம்: தலைவர்கள் மரியாதை**

- சீக்கிய மதத்தின் பத்தாவது குருவான குரு கோவிந்த் சிங்கின் 354—ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் மற்றும் தலைவர்கள் புதன்கிழமை மரியாதை செலுத்தினர்.
- மகாராட்டிர மாநிலத்திலுள்ள நாண்டெட் என்னும் இடத்தில் அக்டோபர் 7, 1708இல் மரணமடைந்தார்.

**ஐ.நா. உயர்நிலை பொருளாதார ஆலோசனைக் குழுவில் ஜெயதி கோஷ்**

- ஐ.நா. அமைப்பின் உயிர்நிலை சமூக, பொருளாதார ஆலோசனைக் குழுவில் இந்தியாவைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் ஜெயதி கோஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- அவர் தவிர 19 சர்வதேச பொருளாதார நிபுணர்களும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.


- கரோனாவுக்கு பிறகு ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார சவால்கள், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சூழல் உள்ளிட்டவை குறித்தும், அவற்றை சமாளிப்பது குறித்தும் ஐ.நா. பொது சபைக்கு இக்குழுவினர் ஆலோசனை வழங்க இருக்கின்றனர்.
- 65 வயதாகும் ஜெயதி கோஷ் தில்லி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார். பின்னர் ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி முடித்தார். தொடர்ந்து அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

## எஸ்டோனியா முதல் பெண் பிரதமர் பதவியேற்பு

- வடகிழக்கு ஐரோப்பிய நாடான எஸ்டோனியா பிரதமராக கஜா கலாஸ் பொறுப்பேற்றுக் கொண்டார்.
- 43 வயதாகும் அவர், அந்த நாட்டின் முதல் பெண் பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது.
- கலாஸ் தலைமையிலான 'சீர்திருத்தக்' கட்சியும், 'மையக்' கட்சியும் ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட ஒப்பந்தத்தின்கீழ் இரு கட்சிகளும் கூட்டணி அரசை அமைத்துள்ளது.
- புதிய அமைச்சரவையில் இரு கட்சிகளையும் சேர்ந்த தலா 7 அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- ஊழல் குற்றச்சாட்டு காரணமாக, 'மையக்' கட்சியின் ஜூரி ரடாஸ் தலைமையிலான முந்தைய அரசு இந்த மாதம் கவிழ்ந்தது

# 5.பொருளாதார நிகழ்வுகள்

**2012க்கு பின் இடையில் மாநிலங்களுக்கிடையிலான அவசிய தேவைகளின் இடைவெளி குறைந்துவிட்டது**





- கேரளா, பஞ்சாப், ஹரியானா மற்றும் குஜராத் போன்ற மாநிலங்கள் அவசிய தேவைகளுக்கு அதிக அணுகலைக் கொண்டிருந்தன, அதே நேரத்தில் ஒடிசா, ஜார்கண்ட், மேற்கு வங்கம் மற்றும் திரிபுராவில் இது மிகக் குறைவு.
- ஏழை மாநிலங்கள் தங்கள் குடிமக்களுக்கு அன்றாட வாழ்க்கையின் அடிப்படைகள் — வீட்டுவசதி, நீர், மின்சாரம், சுகாதாரம், சமையல் எரிவாயு ஆகியவற்றை அணுகுவதில் பணக்கார நாடுகளுடனான இடைவெளியைக் குறைத்துள்ளன — ஒரு புதிய ' அவசிய தேவைகள் அட்டவணை' (பி.என்.ஐ) பொருளாதார ஆய்வு 2020—21.
- 2012 உடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டில் நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் 'அவசிய தேவைகளுக்கான' அணுகல் மேம்பட்டுள்ளது
- நீர், வீட்டுவசதி, சுகாதாரம், மைக்ரோ சூழல் மற்றும் பிற வசதிகளுக்கான ஐந்து பரிமாணங்களில் முன்னேற்றம்
- 2012 மற்றும் 2018 க்கு இடையில் பின்தங்கிய மாநிலங்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகிவிட்டதால் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் மாநிலங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகள் குறைந்துவிட்டன
- கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள பணக்கார குடும்பங்களுடன் ஒப்பிடும்போது ஏழ்மையான குடும்பங்களுக்கு ஏற்றவாறு மேம்பட்டது.

- ‘அவசிய தேவைகளுக்கு’ மேம்பட்ட அணுகல் குழந்தை இறப்பு மற்றும் 5 வயதிற்குட்பட்ட இறப்பு விகிதம் போன்ற சுகாதார குறிகாட்டிகளில் மேம்பாட்டிற்கு வழிவகுத்தது, மேலும் கல்வி குறிகாட்டிகளில் எதிர்கால மேம்பாடுகளுடன் தொடர்புடையது
- மாநிலங்கள் முழுவதும், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களுக்கு இடையில் மற்றும் வருமானக் குழுக்களுக்கு இடையில் வெறும் தேவைகளுக்கான அணுகலில் மாறுபாட்டைக் குறைக்க உந்துதல் கொடுக்கப்பட வேண்டும்
- ஜல் ஜீவன் மிஷன், SBM-G, PMAY-G போன்ற திட்டங்கள் இந்த இடைவெளிகளைக் குறைக்க பொருத்தமான மூலோபாயத்தை வடிவமைக்கலாம்.

## டிசம்பர் 2020ல் ஜிஎஸ்டி வசூல் சாதனை படைத்தது

- டிசம்பரில் ஜிஎஸ்டி வசூல் எப்போதும் இல்லாத அளவுக்கு ₹1,15,174 கோடியை எட்டியது.
- அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவல்களின்படி, ஜூலை 2017 இல் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து டிசம்பர் மாதத்தில் மிக உயர்ந்தது.
- முந்தைய சிறந்தது ஏப்ரல் 2019 இல் ₹1,13,866 கோடி,.
- 2020 டிசம்பர் வருவாய், நவம்பர் மாத வசூல் ₹1,04,963 கோடியை விட கணிசமாக அதிகமாகும்.
- கடந்த காலாண்டில் ஜிஎஸ்டி வருவாயின் சராசரி வளர்ச்சி 7.3 சதவீதமாக இருந்தது (−) இரண்டாவது காலாண்டில் 8.2 சதவீதமாகவும், (−) முதல் காலாண்டில் 41.0 சதவீதமாகவும் இருந்தது.





| GST Collection/Month wise (Rs cr) | | | GST Collection/Key States (Rs cr) | | |
|---|---|---|---|---|---|
| Month | 2019-20 | 2020-21 | State | Dec, 2019 | Dec, 2020 |
| April | 113865 | 32172 | Maharashtra | 16530 | 17699 |
| May | 100289 | 62151 | Gujarat | 6621 | 7469 |
| June | 99939 | 90917 | Karnataka | 6886 | 7459 |
| July | 102083 | 87422 | Tamil Nadu | 6422 | 6905 |
| August | 98202 | 86449 | Uttar Pradesh | 5489 | 5937 |
| September | 91916 | 95480 | Haryana | 5365 | 5747 |
| October | 95379 | 105155 | West Bengal | 3748 | 4114 |
| November | 103491 | 104963 | Delhi | 3698 | 3451 |
| December | 103184 | 115174 | Telangana | 3420 | 3543 |

**உற்பத்தித்துறை செயல்பாடு டிசம்பரில் வலுப்பெற்றது**

- உள்ளீட்டு செலவு பணவீக்கம் 26 மாத உயர்வில், ஏற்றுமதி ஒழுங்கு வளர்ச்சி 4 மாத குறைந்த அளவிற்கு குறைந்தது.
- பருவகாலமாக சரிசெய்யப்பட்ட ஐ.எச்.எஸ்(HIS) மார்கிட் இந்தியா உற்பத்தி கொள்முதல் மேலாளர்கள் (PMI) டிசம்பரில் 56.4 ஆக இருந்தது, இது நவம்பர் மாத அளவீடு 56.3 ஐ விட அதிகமாகும்.
- இந்திய பொருட்களுக்கான சர்வதேச தேவை டிசம்பரில் உயர்ந்தது, ஆனால் தொற்றுநோயால் வளர்ச்சி தடைபட்டது.
- நான்கு மாத குறைந்த அளவிற்கு வெளியீட்டு வளர்ச்சியும் தளர்த்தப்பட்டது. ஆனாலும் வலுவாக இருந்தது.

**இந்த நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.7% ஆக சுருங்க வாய்ப்புள்ளது: மத்திய அரசு**




- இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020–21 ஆம் ஆண்டில் 7.7% சுருங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO).
- கரோனா பாதிப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. விவசாயம் தவிர்த்து ஏனைய அனைத்து துறைகளின் வளர்ச்சியும் பின்னோக்கி சென்றுள்ளது.
- கடந்த நிதியாண்டில் 4.2 சதவீத வளர்ச்சியை எட்டியிருந்த இந்தியப் பொருளாதாரம் நடப்பு 2020–21–ஆம் நிதியாண்டில் –7.7% அளவுக்கு பின்னடைவைச் சந்திக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண்டின் வர்த்தகம், ஹோட்டல், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு தொடர்பான சேவைகள் (21.4%), அதனைத் தொடர்ந்து கட்டுமானம் (12.6%), சுரங்க மற்றும் குவாரி (12.4%) மற்றும் உற்பத்தி (9.4%) ஆகியவற்றில் கூர்மையான சரிவு எதிர்பார்க்கப்படுகிறது.
- அடிப்படை விலையில் உண்மையான ஜி.வி.ஏ(Gross value added) 2020–21ல் ₹123.39 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2019–20ல் ₹133.01 லட்சம் கோடியாக இருந்தது.

**உலக உணவு விலைக் குறியீடு: டிசம்பர் மாதத்தில் ஏழாவது மாதமாக உயர்கிறது.**

- தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பால் பொருட்கள், இறைச்சி மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் மாதாந்திர மாற்றங்களை அளவிடும் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO) உணவு விலைக் குறியீடு, கடந்த மாதம் சராசரியாக 107.5 புள்ளிகள் மற்றும் நவம்பரில் 105.2 ஆக இருந்தது.
- 2020 முழுவதும், இலக்குக் குறி குறியீடு சராசரியாக 97.9 புள்ளிகள், மூன்று ஆண்டு அதிகம் மற்றும் 2019 ஐ விட 3.1% அதிகரிப்பு.
- தாவர எண்ணெய் விலைகள் சமீபத்திய வலுவான லாபங்களைத் தொடர்ந்தன, நவம்பரில் 14% க்கும் அதிகமானதை அடுத்து டிசம்பரில் மாதத்திற்கு 4.7% உயர்ந்தன.
- தானிய விலைக் குறியீடு டிசம்பர் மாதத்தில் முந்தைய மாதத்திலிருந்து 1.1% உயர்ந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான, குறியீட்டு எண் 2019 நிலைகளை விட சராசரியாக 6.6% ஆக இருந்தது.
- கடந்த மாதம், FAO 2020 தானிய பருவத்திற்கு அறுவடை கணிப்பை மூன்றாவது மாதத்திற்கு திருத்தியது. முந்தைய 2.75 பில்லியன் டன்னிலிருந்து 2.74 பில்லியன் டன்னாக குறைத்தது.

**காஷ்மீர் தொழில் வளர்ச்சிக்கு ரூ.28,400 கோடி திட்டம்**

- ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா.
- இத்திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில், தயாரிப்பு தொழில் துவங்குவோருக்கு, இயந்திர தளவாட முதலீடுகளில், 50 சதவீதம்; நகர்ப்புறங்களில், 30 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

ARUL IAS ACADEMY

# 6.அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## தடுப்பூசி பங்கில் ஆர்வமுள்ள தனியார் மருத்துவமனைகள்

**Inoculation campaign**

A look at a select list of COVID-19 vaccines that have been approved for full/emergency use in different countries



| Manufacturer | Efficacy | Storage | Status |
|---|---|---|---|
| Oxford University-AstraZeneca | Upto 90% | 2-8 degree Celsius | Approved for restricted emergency use in India and emergency use in U.K. |
| Bharat Biotech-ICMR | Unknown | 2-8 °C | Approved for restricted use in emergency situation in India |
| Pfizer-BioNTech | 95% | -70 °C | Approved for full use/emergency use in several countries |
| Moderna | 94.50% | -20 °C | Approved in Canada; emergency use in U.S. |
| Gamaleya Research Center | 91.40% | -18 °C | Early use in Russia, emergency use in Belarus and Argentina |
| CanSino Biologics | Unknown | 2-8 °C | Limited use in China |
| Vector Institute | Unknown | 2-8 °C | Early use in Russia |
| Beijing Institute of Biological Products | 79.34% | 2-8 °C | Limited use in China |
| Sinovac Biotech | >50% | 2-8 °C | Limited use in China |
| Sinopharm | Unknown | 2-8 °C | Approved in China, U.A.E. and Bahrain |

ARUL IAS ACADEMY

- ஃபைசர் மற்றும் மாடர்னா தடுப்பூசிகள் ஒப்புதல் பெற்றவுடன், அவர்கள் இந்த தடுப்பூசிகளை வழங்கத் தொடங்குவார்கள்
- ரந்தீப் குலேரியா, அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் இயக்குனர்
- ஆதார் பூனவல்லா, தலைமை நிர்வாக அதிகாரி, சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா (SII)
- தடுப்பூசிகளைப் பொறுத்தவரை, இதுவரை அங்கீகரிக்கப்பட்ட இரண்டு ஆக்ஸ்போர்டு / அஸ்ட்ராஜெனெகா / சீரம் இன்ஸ்டிடியூட் தடுப்பூசி மற்றும் பாரத் பயோடெக் தடுப்பூசி.

## நம்பிக்கையூட்டும் கரோனா தடுப்பூசிகள்

- உலகம் முழுவதும் 200—க்கும் அதிகமான கரோனா தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டன.
- இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள முக்கிய கரோனா தடுப்பூசிகளின் ஒப்பீடு:

| | தயாரிப்பு நிறுவனங்கள் | தற்போதைய நிலை | தடுப்பூசியின் அளவு | சேமிப்பு வெப்பநிலை | விலை |
|---|---|---|---|---|---|
| கோவாக்சின் | இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், தேசிய நுண்ணுயிரியல் மையம் ஆகியவற்றுடன் இணைந்து பாரத் பயோடெக் நிறுவனம் தயாரிப்பு | இந்தியாவில் பயன்பாட்டுக்கு அனுமதி | 4 வார இடைவெளியில் இரு முறை | அறை வெப்பநிலை (7 நாள்கள்) | ரூ.100–க்கும் குறைவு |
| கோவிஷீல்ட் | பிரிட்டனின் அஸ்ட்ராஸெனகா நிறுவனத்துடன் இணைந்து ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் தயாரிப்பு | இந்தியா, பிரிட்டன், ஆர்ஜென்டினா, மெக்ஸிகோவில் பயன்பாட்டுக்கு ஒப்புதல் | 4 வார இடைவெளியில் இரு முறை | 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் (6 மாதங்கள்) | ரூ.200 (இந்தியாவில்), ரூ.1,000 (மற்ற நாடுகளில்) |
| ஃபைஸர் | அமெரிக்காவின் ஃபைஸர் நிறுவனமும் ஜெர்மனியின் பயோஎன்டெக் நிறுவனமும் இணைந்து தயாரிப்பு | அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய யூனியன் நாடுகள், சவூதி அரேபியா, சிங்கப்பூர், ஆர்ஜென்டினா, மெக்ஸிகோவில் ஒப்புதல் | 3 வார இடைவெளியில் இரு முறை | மைனஸ் 70 டிகிரி செல்ஷியஸ் | ரூ.5,500 |
| மாடர்னா | அமெரிக்காவின் மாடர்னா நிறுவனம் | அமெரிக்கா, கனடா, இஸ்ரேல், ஐரோப்பிய யூனியனில் பயன்பாட்டுக்கு ஒப்புதல். | 4 வார இடைவெளியில் இரு முறை | 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் (30 நாள்கள்) மைனஸ் 20 டிகிரி செல்ஷியஸ் (6 மாதங்கள்) | ரூ.7,200 |
| ஸ்புட்னிக்–வி | ரஷியாவின் கமலேயா ஆராய்ச்சி மையம் | ரஷியா உள்ளிட்ட நாடுகளில் பயன்பாட்டுக்கு ஒப்புதல் | 3 வார இடைவெளியில் இரு முறை | 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் | |
| ஜான்சன்&ஜான்சன் | ஜான்சன்&ஜான்சன் நிறுவனம் | மூன்றாம் கட்ட பரிசோதனை | ஒரு முறை (இரு முறை செலுத்துவது தொடர்பாக ஆய்வு) | 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் (3 மாதங்கள்), மைனஸ் 20 டிகிரி செல்ஷியஸ் (2 ஆண்டுகள்) | |
| கரோனாவேக் | சீனாவின் சைனோஃபார்ம் நிறுவனம் | சீனாவில் பயன்பாட்டுக்கு ஒப்புதல் | 2 வார இடைவெளியில் இரு முறை | | |
| வெக்டார் இன்ஸ்டிடியூட் | ரஷியாவின் வெக்டார் இன்ஸ்டிடியூட் | மூன்றாம் கட்ட பரிசோதனை | | 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் | |
| நோவாவேக்ஸ் | அமெரிக்காவின் நோவாவேக்ஸ் நிறுவனம் | மூன்றாம் கட்ட பரிசோதனை | | 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் | |
| கோன்விடெசியா | சீனாவின் கேன்சைனோ பயலாஜிக்ஸ் நிறுவனம் | சீன ராணுவத்தில் மட்டும் பயன்பாட்டில் உள்ளது | | | |

## 2020—இல் அதிகம் விற்பனையான மாடல் மாருதி சுஸுகி ஸ்விஃப்ட்

- கடந்த 2020—ஆம் ஆண்டில் பெரும்பாலான வாடிக்கையாளர்களின் விருப்பத் தேர்வில் முதலிடத்தை ஸ்விஃப்ட் மாடல் பிடித்துள்ளதாக மாருதி சுஸுகி நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து அந்த நிறுவனம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:கடந்த 2020—ஆம் ஆண்டில் அதிகம் விற்பனையான சிறந்த மாடல்களில் மாருதி சுஸுகியின் ஸ்விஃப்ட் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- பெரும்பாலான வாடிக்கையாளர்களின் விருப்பத் தேர்வாக இருந்ததையடுத்து கடந்த ஆண்டில் மட்டும் 1,60,700 ஸ்விஃப்ட் மாடல் கார்கள் விற்பனையாகியுள்ளன.கடந்த 2005—ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது முதல் அதன் ஒட்டுமொத்த விற்பனை 23 லட்சம் மைல்கல்லை தாண்டியுள்ளது.
- மாருதி ஸ்விஃப்ட் 5 லட்சம் மைல்கல் விற்பனை கடந்த 2010—ஆம் ஆண்டிலும், 10 லட்சம் 2013—ஆம் ஆண்டிலும், 15 லட்சம் 2016—ஆம் ஆண்டிலும் எட்டப்பட்டது.
- கரோனா பாதிப்புக்கிடையிலும் இந்த சாதனையை மாருதி ஸ்விஃப்ட் நிகழ்த்தியுள்ளது தனிச்சிறப்பு. பணத்துக்கு தகுந்த மதிப்பு, அனைவரையும் கவரும் வடிவமைப்பு மற்றும் அதிநவீன தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஸ்விஃப்ட் காரின் 53 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் 35 வயதுக்கும் குறைவானவர்கள் என்பது நிறுவனத்துக்கு கிடைத்த கூடுதல் பலம் என மாருதி சுஸுகி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பிரபஞ்சம் எவ்வளவு பழையது?

- ஒரு புதிய ஆய்வு, அண்டம் 13.77 பில்லியன் ஆண்டுகள் பழமையானது, 40 மில்லியன் ஆண்டுகள் முன்பு அல்லது பின்பு என்று கணக்கிடுகிறது, இது பிளாங்க் செயற்கைக்கோளைப் பயன்படுத்தி முந்தைய மதிப்பீடுகளுடன் உடன்படுகிறது.
- வானியலாளர்கள் Chilean Atacama Cosmology Telescope(ACT)ஐ பயன்படுத்தினர்.
- 2019 ஆம் ஆண்டில், மற்றவர்கள் இந்த மதிப்பீட்டை விட பிரபஞ்சம் நூற்றுக்கணக்கான மில்லியன் ஆண்டுகள் இளையது என்பதைக் காட்டினர், விண்மீன் திரள்களின் இயக்கங்களை அளவிடுவதன் மூலம், இது ஒரு விவாதத்தைத் தூண்டியது.

## ஒரே இரட்டையர்கள் சரியான உருவங்களுடன் இல்லை, ஆய்வு காட்டுகிறது

- 15% ஒத்த இரட்டையர்களில் 100 மரபணு வேறுபாடுகளைக் காட்டியது.
- ஐஸ்லாந்தில் உள்ள விஞ்ஞானிகள் 387 ஜோடி ஒத்த இரட்டையர்களிடமிருந்து டி.என்.ஏவை வரிசைப்படுத்தினர் — ஒரே கருவுற்ற முட்டையிலிருந்து பெறப்பட்டவர்கள் — அதே போல் அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் வாழ்க்கைத் துணைவர்களிடமிருந்தும் , இது "ஒரே மாதிரியான இரட்டையர்களைப் பிரிக்கும் ஆரம்ப பிறழ்வுகளைக் கண்டறிய" அனுமதித்தது என்று ஐஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் மரபியலாளர் Kari Stefansson கூறினார்.
- சராசரியாக, ஒரே மாதிரியான இரட்டையர்களுக்கு இந்த ஆரம்ப மரபணு வேறுபாடுகளில் 5.2 இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். ஆனால் ஒரே மாதிரியான இரட்டை ஜோடிகளில் சுமார் 15% அதிகமான மரபணு வேறுபாடுகள் உள்ளன, அவற்றில் சில 100 வரை உள்ளன என்று ஸ்டீபன்சன் கூறினார்.
- 2008 ஆம் ஆண்டு *The American Journal of Human Genetics* பத்திரிகையில், ஒரே இரட்டையர்களுக்கு இடையிலான சில மரபணு வேறுபாடுகளை அடையாளம் கண்டுள்ளது.

## 2017 இல் ஜெய்ப்பூர் அருகே விழுந்த விண்கல்லை decode செய்தல்




- ஜூன் 6, 2017 அன்று, அதிகாலை 5 மணியளவில், ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ள முகுந்த்புரா கிராமத்தில் வசிப்பவர்கள் வானத்தில் ஒரு பிரகாசமான தடத்தைக் கண்டனர், அதைத் தொடர்ந்து இடி முழங்கியது.
- விண்கல் பல துண்டுகளாக உடைந்தது, ஆனால் தாக்கிய இடத்தில் சுமார் 15 செ.மீ விட்டம் மற்றும் 10 செ.மீ ஆழம் கொண்ட ஒரு குழி உருவாக்கப்பட்டது.
- Mukundpura CM2 என்ற விண்கல் ஒரு carbonaceous chondrite என வகைப்படுத்தப்பட்டது.
- விண்கற்கள் பொதுவாக மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன – stony (silicaterich), iron (Fe-Ni alloy), and stonyiron (mixed silicate-iron alloy).
- கடந்த மாதம், ஜப்பானின் ஹயாபூசா–2 பணி Ryuguவின் மாதிரிகளுடன் பூமியில் தரையிறங்கியது.

ARUL IAS ACADEMY


# 7.தேசிய முக்கியத்துவம்

## மலிவு வீட்டுவசதிக்கான திட்டத்தை பிரதமர் வெளியிட்டார்

- பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (நகர்ப்புற) இன் கீழ், மொத்தம், ₹27,000 கோடிக்கு மேல் செலவில் 1.62 லட்சம் மாடி குடியிருப்புகள் மற்றும் 3.42 லட்சம் தனிநபர் வீடுகளை கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி கூறுகையில், பி.எம்.ஏ.ஐ—நகர்ப்புற திட்டத்தின் கீழ், 1.12 கோடி வீடுகளின் கோரிக்கைக்கு எதிராக 1.09 கோடி வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன, 40 லட்சம் வீடுகள் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன, மேலும் 70 லட்சம் வீடுகள் கட்டுமானத்தில் உள்ளன.

## 2020 ஆம் ஆண்டில், மாநிலங்களவை இதுவரை இல்லாத அளவிற்கு குறைந்த அமர்வுகளைக் கண்டது

- மாநிலங்களவை ஒட்டுமொத்தமாக 33 அமர்வுகளை நடத்தியது, பட்ஜெட் அமர்வு (23 அமர்வுகள்) மற்றும் பருவமழை அமர்வு (10) ஆகியவை கோவிட் —19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு அமர்வும் தலா எட்டு அமர்வுகளை இழந்தன.
- மொத்தம் 39 மசோதாக்கள் — பட்ஜெட் அமர்வின் போது 12 மற்றும் மழைக்கால அமர்வின் போது 27 — 2020 ஆம் ஆண்டில் மாநிலங்களவை நிறைவேற்றியுள்ளன.





## இந்திய கோவேக்ஸின் கோவிஷீல்டு தடுப்பூசிகளுக்கு அரசு ஒப்புதல்

- சீரம் நிறுவனம் கோவிஷீல்டு தடுப்பு மருந்தை உற்பத்தி செய்து மத்திய அரசின் தடுப்பூசி திட்டத்துக்கு விநியோகிக்க (4.01.2021) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- பிற நாடுகளுடன்...இதன் மூலம் பிரிட்டன், ரஷியா, அமெரிக்கா, சீனா, சிங்கப்பூர், ஐரோப்பிய யூனியன் நாடுகளின் வரிசையில், கரோனா தடுப்பூசியை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் நாடாக இந்தியாவும் சேர்ந்துள்ளது.

- இந்த இரண்டு தடுப்பூசிகளில் 'கோவேக்ஸின்' தடுப்பூசி முழுவதும் உள்நாட்டிலேயே பாரத் பயோடெக் நிறுவனமும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலும் (ஐசிஎம்ஆர்) இணைந்து தயாரித்ததாகும்.
- ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் 'கோவிஷீல்ட்' தடுப்பூசியைப் பொருத்தவரை உலகின் மிகப் பெரிய மருந்து உற்பத்தி நிறுவனமான புணேயில் உள்ள சீரம் நிறுவனம் பிரிட்டனின் அஸ்ட்ராஜெனிகா நிறுவனத்துடன் இணைந்து தயாரித்ததாகும்.
- இந்த அனுமதி மூலம் இந்தியாவில் இந்த இரண்டு தடுப்பூசிகளும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வருவதற்கு வழி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தடுப்பூசிகளும் 2 டிகிரி முதல் 8 டிகிரி செல்சியஸ் வரையிலான தட்பவெப்பநிலையில் பாதுகாத்து வைக்கப்பட வேண்டும். மேலும், இந்த இரண்டு தடுப்பூசிகளும் ஒவ்வொரு நபருக்கும் குறிப்பிட்ட இடைவெளியில் இரண்டு முறை போடப்படும்.

**அவசரகால பயன்பாட்டிற்காக இரண்டு கோவிட் 19 தடுப்பூசிகளை இந்தியா அங்கீகரிக்கிறது**




- மத்திய மருந்துகள் மற்றும் தரநிலைக் குழு (சி.டி.எஸ்.கோ) பாரத் பயோடெக் மற்றும் சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா (எஸ்.ஐ.ஐ) ஆகியோரால் COVID-19 தடுப்பூசிகளை முறையாக அங்கீகரித்தது.
- COVID-19 ஆல் அதிக ஆபத்தில் கருதப்படும் 3 கோடி மக்களுக்கு தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சகம் கூறியிருந்தது.
- சி.டி.எஸ்.கோவின் தலைவர் வி.ஜி. சோமணி.
- சமிரான் பாண்டா, தொற்றுநோயியல் மற்றும் தொற்று நோய்கள் பிரிவின் தலைவர், ஐ.சி.எம்.ஆர்) (Indian Council of Medical Research (ICMR).
- ஐ.சி.எம்.ஆர் அமைப்பான தேசிய வைராலஜி நிறுவனத்தில் வளர்க்கப்பட்ட SARSCoV2 திரிபு அடிப்படையில் கோவாக்சின் உருவாக்கப்பட்டுள்ளது.

**அயோத்தி ராம் கோயில் அடித்தளத்தின் பணிகள் ஜனவரி இறுதிக்குள் தொடங்கப்பட உள்ளன.**

- ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்தச் சேத்திர அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய்.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) அவர்களுக்கு சாராயு ஆற்றின் ஒரு கால்வாயின் (நீரோட்டை) கட்டுமான படங்களை அனுப்பியிருந்தது.
- முதல் மண் பரிசோதனை பிப்ரவரி 2020 இல் நடந்தது.
- தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் (ஹைதராபாத்), மத்திய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (ரூர்க்கி), ஐ.ஐ.டி–பம்பாய், ஐ.ஐ.டி– குவகாத்தி மற்றும் ஐ.ஐ.டி–மெட்ராஸ் உள்ளிட்ட சுமார் 10 நிறுவனங்கள் ஆய்வில் ஈடுபட்டன.
- இந்த கோயில் 360 அடி நீளமும், 235 அடி அகலமும், 161 அடி உயரமும், அஸ்திவாரம் தரை மட்டத்திலிருந்து 16.5 அடி உயரமும் இருக்கும்.

**மூன்று மடங்கு பெரிய பாராளுமன்றத்தை உருவாக்க “சென்ட்ரல் விஸ்டா” திட்டத்தை உச்ச நீதிமன்றம் அனுமதித்தது**






- புதிய பாராளுமன்றம் தற்போதுள்ள 93 ஆண்டு பழமையான பாரம்பரியக் கட்டிடத்தை விட மூன்று மடங்கு பெரியது மற்றும் 86.1 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்துவதை மாற்றியமைக்கிறது.
- நீதிபதிகள் ஏ.எம். கான்வில்கர், சஞ்சீவ் கன்னா மற்றும் தினேஷ் மகேஸ்வரி ஆகியோர் மத்திய அரசு ஒரு திட்டத்திற்கு பணத்தை செலவழிக்கும் போது, அதை வேறு ஏதாவதுற்கு பயன்படுத்த நீதிமன்றம் உத்தரவிட முடியாது என்றார்.
- நாட்டின் 75—ஆவது சுதந்திர தினம், வரும் 2022—ஆம் ஆண்டில் கொண்டாடப்படுவதற்கு முன்பு புதிய நாடாளுமன்றத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ் இலக்கியங்களைப் பாதுகாப்பதே தமிழ் அகாதெமியின்"' முதல் பணி :அரவிந்த் கெஜ்ரிவால்

- தமிழ் இலக்கியங்களைப் பாதுகாப்பதே தில்லி தமிழ் அகாதெமியின் முதல் பணியாகும் என்று தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்தார்.
- தமிழ் மொழி, கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக தில்லி அரசு தமிழ்அகாதெமியை அமைத்து அறிவித்துள்ளது.
- இதன் தலைவராக தில்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, துணைத் தலைவராக முன்னாள் கவுன்சிலர் N. ராஜா மற்றும் 13 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஐ.நா.,வில் இந்தியா தலைமையில் 3 குழு

- ஐ.நா., விற்கான இந்திய தூதர், டி.எஸ்.திருமூர்த்தி
- தலிபான் தடைக் குழு, பயங்கரவாத எதிர்ப்புக் குழு மற்றும் லிபியா தடைக் குழு ஆகியவற்றின் தலைமை பொறுப்பு, இந்தியா வுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.
- இந்தியா, 75வது ஆண்டு சுதந்திர தினத்தை கொண்டாட உள்ளது. அப்போது, பயங்கரவாத எதிர்ப்பு குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்க உள்ளது குறிப்பிடத்தக்கது.
- லிபியா தடைக் குழுவின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்க உள்ளது.
- நாடு தழுவிய இரண்டாவது பயிற்சி ஓட்டம் நடைபெற்றது.

## கடல்சார் ஆராய்ச்சிக் கப்பல் 'சாகர் அன்வேசிகா' நாட்டுக்கு அர்ப்பணித்தார்: மத்திய அமைச்சர் ஹர்ஷ்வர்தன்

- தேசிய கடல் தொழில் நுட்பக் கழகத்தின் 'சாகர் அன்வேசிகா' என்ற ஆராய்ச்சிக் கப்பலை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- காலநிலை மாற்றத்தை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஜப்பான் உள்ளிட்ட முன்னணி நாடுகளுக்கு கிடைக்கும் வசதியை இப்போது நாமும் பெற்று உள்ளோம்.
- கொல்கத்தாவில் கட்டப்பட்ட 'சாகர் அன்வேசிகா' ஆராய்ச்சி கப்பல் 43 மீட்டர் நீளமும், 9.6 மீட்டர் அகலமும் கொண்டது.
- 496 டன் எடை கொண்ட இந்த கப்பலில் 8 விஞ்ஞானிகளும், 12 பணியாளர்களும் பணியில் இருப்பர்கள்.
- கரையில் இருந்து 300 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று, கடலில் 3 கிலோ மீட்டர் ஆழத்தில் 16 மணிநேரம் விஞ்ஞானிகள் தங்கி இருந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் வசதி உள்ளது.

## உலகின் மிகப்பெரிய தடுப்பூசி திட்டம் இந்தியாவில் ஜனவரி 16 அன்று தொடங்குகிறது




- முதல் கட்டத்தில் அரசு மற்றும் தனியார் துறை சுகாதாரப் பணியாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (ஐ.சி.டி.எஸ்) தொழிலாளர்கள் உட்பட, தடுப்பூசி பெறுவார்கள்.
- குஜராத்தில், 161 மையங்கள் தடுப்பூசி வழங்கும் என்று முதல்வர் விஜய் ரூபானி தெரிவித்தார்.
- கோவாவில் 700 சுகாதாரப் பணியாளர்களுக்கு கோவிட் –19 தடுப்பூசி வழங்கப்படும் என்று முதல்வர் பிரமோத் சாவந்த் தெரிவித்தார்.
- ஆந்திராவில் இந்த இயக்கத்தை தொடங்க 332 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## மேலும் கடன் வாங்க தமிழகத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கிறது

- 'ஒன் நேஷன் ஒன் ரேஷன் கார்டு' செயல்படுத்தும் 11 வது மாநிலம்
- ஒன் நேஷன் ஒன் ரேஷன் கார்டு (ONOR) திட்டத்தை லாபகரமாக அமல்படுத்திய பின்னர், தமிழகத்திற்கு, ₹4,813 கோடி கடன் வாங்க யூனியன் அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளனர்.
- மாநிலங்களின் கடன் வாங்குவதை அவர்களின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.எஸ்.டி.பி) 2% நீட்டிக்க மே மாதம் தீர்மானித்தது.
- மீதமுள்ளவை ஒரு பாதிக்கு (1%) நிபந்தனையின்றி அனுமதிக்கப்படுகின்றன.
- மொத்தத்தில், 2020–21 முழுவதும் தமிழ்நாட்டின் கடன் கட்டுப்பாடு குறைந்தது 1.5% ஆக இருக்கலாம், இல்லையென்றால் 1.75% ஆக இருக்கலாம்,
- ஆந்திரா, கோவா, குஜராத், ஹரியானா, கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், தெலுங்கானா, திரிபுரா மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகியவை ONOR ஐ மேற்கொண்டுள்ளன.


## புதிய தொழில் நிறுவனங்களுக்கு ரூ.1,000 கோடி நிதி: பிரதமர் மோடி அறிவிப்பு

- புதிய தொழில் தொடங்குவோரை ஊக்குவிப்பதற்காக 'ஸ்டார்ட்—அப் இந்தியா' திட்டம் கடந்த 2016—ஆம் ஆண்டு ஜனவரி 16—இல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது.
- அத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி 'பிராரம்ப்: ஸ்டார்ட்—அப் இந்தியா சர்வதேச மாநாடு' காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.
- கடந்த 2014—ஆம் ஆண்டில் 4 புதிய தொழில் நிறுவனங்கள் மட்டுமே 100 கோடி அமெரிக்க டாலருக்கும் அதிகமான மதிப்பு கொண்டவையாக இருந்தன.
- அந்த எண்ணிக்கை தற்போது 30—க்கும் அதிகமாக உள்ளது. கடந்த 2020—ஆம் ஆண்டில் மட்டும் 11 புதிய தொழில் நிறுவனங்களின் மதிப்பு, 100 கோடி அமெரிக்க டாலர்களைக் கடந்தது.

## தேசிய சாலை பாதுகாப்பு மாதம்

- தேசிய சாலை பாதுகாப்பு மாதம் ஜனவரி 18 முதல் பிப்ரவரி 17, 2021 வரை நடைபெற உள்ளது
- உலகளவில் விபத்து தொடர்பான இறப்புகளில் 11 சதவீதம் இந்தியாவில் உள்ளது
- 2019 தரவு பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுபவர்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் அதிக ஆபத்தில் இருப்பதைக் காட்டுகிறது
- மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோர் இதனைத் தொடங்கி வைக்கின்றனர்.

## 27 நகரங்களில் மெட்ரோ ரயில் பணிகள்: பிரதமர் நரேந்திர மோடி




- 2014—ஆம் ஆண்டுக்கு முன்பு 10 முதல் 12 ஆண்டுகளில் 225 கி.மீ.க்கு மட்டுமே மெட்ரோ ரயில் வழித்தடம் செயல்பட்டு வந்தது.
- நாடு முழுவதும் 27 நகரங்களில் 1,000 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருவதாக பிரதமர் மோடி தெரிவித்தார்.
- **குஜராத்தில் ரூ.17,000 கோடியில்...** குஜராத் மாநிலம் ஆமதாபாத், சூரத் ஆகிய பகுதிகளில் ரூ.17,000 கோடியில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

- கடந்த 6 ஆண்டுகளில் 450 கி.மீ.க்கு மேல் மெட்ரோ ரயில் வழித்தடம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.
- **அகமதாபாதில்.** அகமதாபாத் மெட்ரோ ரயில் திட்டம்— 2 சுமார் 28.25 கி.மீ. தொலைவுக்கு இரண்டு வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது.
- முதலாவது வழித்தடம் மோடேரா மைதானம் முதல் மகாத்மா மந்திர் வரையில் சுமார் 22.8 கி.மீ. தொலைவுக்கும், இரண்டாவது வழித்தடம் குஜராத் தேசிய சட்டப் பல்கலைக்கழகம் முதல் குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரம் (ஜிஜஎஃப்டி சிட்டி) வரையில் 5.4 கி.மீ. தொலைவுக்கும் செயல்படுத்தப்படுகிறது. இதன் மொத்த மதிப்பு ரூ.5,384 கோடி ஆகும். சுமார் 6.5 கி.மீ. தொலைவிலான ஆமதாபாத் மெட்ரோ ரயில் திட்டம்— 1ஐ 2019 மார்ச் மாதம் பிரதமர் மோடி தொடங்கிவைத்தார்.
- **சூரத்தில்...** சூரத் மெட்ரோ ரயில் திட்டம் சுமார் 40.35 கி.மீ. தொலைவுக்கு இரண்டு வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. முதலாவது வழித்தடம் சர்தானா முதல் டிரீம் சிட்டி வரையில் 21.61 கி.மீ. தொலைவுக்கும், இரண்டாவது வழித்தடம் பேஸன் முதல் சாரோலி வரையில் 18.74 கி.மீ. தொலைவுக்கும் செயல்படுத்தப்படுகிறது. இதன் மொத்த மதிப்பு ரூ.12,020 கோடி ஆகும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## டிராகன் பழத்தின் பெயர் கமலம் என மாற்றம்—குஜராத் அரசு முடிவு

- டிராகன் பழத்தின் பெயரை கமலம் என்று மாற்றுவதற்கு குஜராத் அரசு முடிவு செய்திருப்பதாக, அந்த மாநில முதல்வர் விஜய் ரூபானி கூறியுள்ளார்.
- இந்தப் பழம் தாமரைப் பூவைப் போல இருப்பதாக இங்குள்ள விவசாயிகள் கூறுகிறார்கள். எனவே, இந்தப் பழத்தின் பெயரை கமலம் என்று மாற்றுவதற்கு மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதன் பின்னணியில் எந்த அரசியலும் இல்லை.
- இந்தப் பழம் கட்ச், நவஸாரி மற்றும் செளராஷ்டிர பிராந்தியத்தின் பல பகுதிகளில் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது. ஆகவே, இந்தப் பழத்துக்கு காப்புரிமை கோரி விண்ணப்பித்துள்ளோம் என்றார் அவர்.

## ஆர்க்டிக்கில், சுற்றுலா ஆராய்ச்சி விரிவாக்கம்—இந்தியா

- புதிய வரைவுக் கொள்கை இப்பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்விலும் கவனம் செலுத்துகிறது
- இந்தியாவின் ஆர்க்டிக் கொள்கை வரைவு ஐந்து தூண்
  1. அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்.
  2. பொருளாதார மற்றும் மனித மேம்பாட்டு ஒத்துழைப்பு.
  3. போக்குவரத்து மற்றும் இணைப்பு.
  4. ஆளுகை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு.
  5. தேசிய திறன் மேம்பாடு.
- இந்தியா தனது முதல் ஆர்க்டிக்அறிவியல் பயணத்தை 2007 இல் அறிமுகப்படுத்தியது.

## ஐ.நா. அமைதி மேம்பாட்டு நிதிக்கு ரூ. 1 கோடி: இந்தியா அறிவிப்பு

- உலக அளவில் அமைதியை நிலைநாட்டும் பணிகளை சர்வதேச சமூகம் திறம்பட மேற்கொள்ள உதவும் வகையில் ஐ.நா. அமைதி மேம்பாட்டு நிதிக்கு இந்த ஆண்டு ரூ. 1 கோடி அளிக்கப்படும் என்று இந்தியா சார்பில் ஐ.நா. சபையில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.
- இதில் ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி.எஸ்.திருமூர்த்தி பங்கேற்று பேசியதாவது: கரோனா பாதிப்புக்கிடையே மேற்கொள்ளப்படும் அமைதி மேம்பாட்டு செயல்பாடுகள் மற்றும் திட்டங்களுக்காக இந்தியா சார்பில் ரூ. 1 கோடி நிதி அளிக்கப்படும்.

- ஐ.நா.வின் இந்தத் திட்டம் தொடர்பாக அண்மையில் நிறைவடைந்த 2020—ஆம் ஆண்டு ஆய்வு முடிவில், அமைதி மேம்பாட்டு திட்டத்தை வலுப்படுத்த ஒருங்கிணைந்த வழிகாட்டி நடைமுறை உருவாக்கப்பட்டது. அதில் 2020 முதல் 2024—ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு விரிவான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டது.
- அதைச் செயல்படுத்த ஐ.நா. அமைதி மேம்பாட்டு நிதிக்கு ரூ. 10,950 கோடி தேவைப்படும். எனவே, உறுப்பு நாடுகள் ஐ.நா.வின் கரத்தை வலுப்படுத்த முன்வரவேண்டும் என்றார்.
- ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ்
- 2020—ஆம் ஆண்டில் இந்த நிதி ரூ. 1,300 கோடி அளவுக்கு சேர்ந்திருந்தது.

## தற்சார்பு இந்தியாவை யாராலும் தடுக்க முடியாது: பிரதமர் நரேந்திர மோடி

- இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்த தலைவர்களில் ஒருவரான நேதாஜி சுபாஷ்சந்திர போஸின் 125—ஆவது பிறந்த தினம் நாடு முழுவதும் தேசிய வலிமை தினமாக கொண்டாடப்பட்டது.
- கொல்கத்தாவின் விக்டோரியா நினைவகத்தில் மாநில அரசு சார்பில் நடத்தப்பட்ட நேதாஜியின் பிறந்தநாள் விழாவில் பிரதமர் பங்கேற்று பேசியதாவது: இந்தியாவின் சக்தியாக, உத்வேகமாக நேதாஜி திகழ்கிறார்.

**'ரஃபேல்ஸ் பொருத்தப்பட்டவை'**

- பிரதமர் கூறினார், "இன்று நம் படைகளில் ரஃபேல் போன்ற ஜெட் விமானங்கள் உள்ளன, அது தேஜாஸ் போன்ற மேம்பட்ட ஜெட் விமானங்களை உற்பத்தி செய்கிறது. தனது நாட்டின் ஆயுதப்படைகள் மிகவும் வலிமையானவை என்றும் அவர் விரும்பிய மேம்பட்ட உபகரணங்கள் இருப்பதை அவர் [நேதாஜி] பார்க்கும்போது, அவர் எப்படி உணருவார் "என்று பிரதமர் கேட்டார்.
- 130 கோடி இந்தியர்கள் அனைவரும் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸுக்கு கடன்பட்டவர்கள் என்றும், அப்படியே இருப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டிய திரு. மோடி, ஜனவரி 23 தேசிய சின்னமான மனிதனின் பிறந்த நாள் மட்டுமல்ல, "சுய பெருமை" பிறந்த நாளாகும் நாடு.

## 150 மீட்டர் நீளம், 30 அடி ஆழமுள்ள எல்லை தாண்டிய சுரங்கப்பாதை கண்டுபிடிக்கப்பட்டது

- காஷ்மீரில் உள்ள கத்துவா நகரில் சர்வதேச எல்லைப் பகுதியில் 150 மீட்டர் நீளம் மற்றும் 30 அடி ஆழம் கொண்ட ஒரு சுரங்க பாதையை எல்லை பாதுகாப்பு படையினர் கண்டுபிடித்தனர்.
- இதே பகுதியில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஹெக்ஸாகாப்டர் எல்லை பாதுகாப்பு படையினரால் சுடப்பட்டதுள ல்லையில் 160 மீட்டர் நீளமுள்ள எல்லை தாண்டிய சுரங்கப்பாதையை கண்டுபிடித்தனர்.
- குறைந்தது 25 அடி ஆழமும் 170 மீட்டர் நீளமும் கொண்ட மற்றொரு 'எலி துளை' சுரங்கப்பாதை, எல்லைப் பாதுகாப்புப் படை (பி.எஸ்.எஃப்) ஜவான்களால் சர்வதேச எல்லையில் சம்பா செக்டரின் கலார் கிராமத்தில் 2020 ஆகஸ்ட் 28 அன்று கண்டுபிடிக்கப்பட்டது.

**ஜிஎஸ்டி இழப்பீடு தொகை: 13 – ஆவது தவணையாக தமிழகத்திற்கு ரூ.339.70 கோடி ஒதுக்கீடு**

- ஜிஎஸ்டி இழப்பீடு தொகையின் 13வது தவணையாக ரூ.6,000 கோடியை மாநிலங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது.
- இதில் தமிழகத்துக்கு ரூ.339.70 கோடியும், புதுச்சேரிக்கு ரூ. 39.40 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அமல்படுத்தப்பட்டதன் மூலம் மாநிலங்களுக்கு வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக ரூ.1.10 லட்சம் கோடி வரை சிறப்பு சாளரத்தின் கீழ் கடனாக பெற மத்திய அரசு அனுமதியளித்து வருகிறது.
- இதில் தற்போது 13 – வது தவணையாக 23 மாநிலங்களுக்கும் 3 யூனியன் பிரதேசத்திற்கும் ரூ.6,000 கோடிக்கான அனுமதியை மத்திய நிதித்துறை வழங்கியுள்ளது.
- இதிலிருந்து 23 மாநிலங்களுக்கு ரூ. 5,516.60 கோடியும், தில்லி, ஜம்மு–காஷ்மீர், புதுச்சேரி ஆகிய மூன்று யூனியன் பிரதேசங்களுக்கு ரூ. 483.40 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.
- இந்த 13 –வது தவணையில் தமிழகத்திற்கு ரூ. 339.70 கோடியும் புதுச்சேரிக்கு ரூ. 39.40 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.
- இதுவரை, ஜிஎஸ்டி அமலாக்கத்தால் ஏற்பட்ட வருவாய் பற்றாக்குறையில், 70 சதவீதம் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் சேர்த்து மாநிலங்களுக்கு மொத்தம் ரூ.71,099.56 கோடியும், சட்டப்பேரவையுடன் கூடிய 3 யூனியன் பிரதேசங்களுக்கு ரூ. 6,900.44 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.
- மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் இந்த தொகை, 5.3 சதவீத வட்டியில் கடனாகப் பெறப்பட்டுள்ளது.
- மொத்த மாநில உற்பத்தியில் 0.50 சதவீத அளவுக்கு கடனை பெற அனுமதிக்கப்படுகிறது.மொத்த தமிழக உற்பத்தியில் ரூ.9627 கோடியாக அளவிடப்பட்டது.
- இதில் தமிழகத்திற்கு ரூ.4890.14 கோடியும், புதுச்சேரிக்கு ரூ.525.14 கோடி சிறப்பு சாளர அடிப்படையில் கூடுதலாக கடன் திரட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- இதில் அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மிஸோரம், நாகலாந்து, சிக்கிம் ஆகிய மீதமுள்ள ஐந்து மாநிலங்களில் ஜிஎஸ்டி அமலாக்கத்தால் வருவாய் பற்றாக்குறை ஏற்படாததால் இந்த மாநிலம் ஒதுக்கீட்டை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ARUL IAS ACADEMY

# 8.சர்வதேச முக்கியத்துவம்

## பிரெக்ஸிட் வர்த்தக ஒப்பந்தம்: பிரிட்டன் நாடாளுமன்றம் ஒப்புதல்

- ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவது 2016–ம் ஆண்டு அங்கு நடந்த பொதுவாக்கெடுப்பில் உறுதியானது.
- கடந்த ஜனவரி 31–ந் தேதி ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறியது.

## ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் நிரந்தரமற்ற உறுப்பினர் தேர்தலில் இந்தியா வெற்றி

- ஐக்கிய நாடுகள் சபையின் மிகவும் சக்திவாய்ந்த அமைப்பாக கருதப்படுவது பாதுகாப்பு சபை.
- இது 5 நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களைக் கொண்டது.
- அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பினராக உள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் பொதுச் சபை இரண்டு நிரந்தரமற்ற ஐந்து உறுப்பினர்களை இரண்டு ஆண்டு காலத்திற்கு சுழற்சி முறையில் தேர்வு செய்கிறது.
- ஆப்பிரிக்க மற்றும் ஆசிய நாடுகளுக்கு ஐந்து; கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒன்று; லத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளுக்கு இரண்டு; மற்றும் மேற்கு ஐரோப்பிய மற்றும் பிற நாடுகளுக்கு இரண்டு என ஒதுக்கப்பட்டுள்ளது.
- இதில் வெற்றி பெற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை.
- இந்த தேர்தலில் ஆசிய –பசிபிக் பிராந்தியம் சார்பில் இந்தியா போட்டியிட்டது.
- 192 உறுப்பினர்களை கொண்ட பாதுகாப்பு சபையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை 128 ஆகும்.
- 184 நாடுகள் இந்தியாவிற்கு ஆதரவாகவும், 113 நாடுகள் கென்யாவுக்கு ஆதரவாகவும் வாக்களித்துள்ளன.
- தெற்காசிய மண்டலத்தில் அமைதி, பாதுகாப்பு, பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்று திரளுதல் நிதி அளிப்பதை தடுத்தல் போன்ற முக்கிய திட்டங்களை இந்தியா ஐ.நா. பாதுகாப்பு சபையின் முன் வைக்கப்பட்டிருப்பதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கள் தெரிவித்துள்ளார்.
- இந்தியா தனது 75–வது சுதந்திர தினத்தை கொண்டாடும்போது, ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய பொறுப்பில் இருக்கும்.

## ஆஸ்திரேலியா: தேசிய கீதத்தில் திருத்தம்

- ஆங்கிலேயர்கள் 18–ஆம் நூற்றாண்டில் தங்கள் காலனி ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தனர்.
- அதன் பூர்வ குடி மக்கள் பின்தங்கிய சமூகமாக இருந்து வருகின்றனர்.அண்மைக் காலமாக, பூர்வ குடி வரலாற்றுக்கு ஆஸ்திரேலிய அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.
- அதன் ஒரு பகுதியாக, அந்த நாட்டின் தேசிய கீதத்தில் ‘இளமையான சுதந்திர நாடு’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது (1.1.2021) முதல் ‘ஒன்றுபட்ட சுதந்திர நாடு’ என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம், ஆங்கில காலனியாதிக்கத்திலிருந்து ஆஸ்திரேலியாவின் வரலாறு தொடங்குவதாக தேசிய கீதத்தில் அர்த்தம் தந்த வார்த்தை நீக்கப்பட்டுள்ளது.

## கஜகஸ்தான் ஜனாதிபதி மரண தண்டனையை ரத்து செய்தார்

- கஜகஸ்தான் மரண தண்டனையை ரத்து செய்தது
- சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைக்கு இரண்டாவது விருப்ப நெறிமுறையை நாடாளுமன்ற ஒப்புதல் அளிப்பதில் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் கையெழுத்திட்டதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2003 முதல் கஜகஸ்தானில் மரணதண்டனை இடைநிறுத்தப்பட்டது, ஆனால் பயங்கரவாதச் செயல்களாகக் கருதப்படும் குற்றங்கள் உட்பட விதிவிலக்கான சூழ்நிலைகளில் நீதிமன்றங்கள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்து வந்தன.

## கருக்கலைப்பு சட்டப்பூர்வமாக்கப்பட்டது

- அர்ஜென்டினாவின் ஜனாதிபதி ஆல்பர்டோ பெர்னாண்டஸ் இந்த மசோதாவுக்கு இறுதி உந்துதல் அளித்தார், கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்குவது வளர்ந்து வரும் அடிமட்ட பெண்கள் இயக்கத்தின் வெற்றியாகும்.
- இது கர்ப்பத்தின் 14 வாரங்கள் வரை எந்த கட்டத்திலும் தன்னார்வ கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்குகிறது.
- கருக்கலைப்பு நடைமுறையை நியாயப்படுத்திய நாடாக 1995 ல் கயானா, 2012 ல் உருகுவே மற்றும் ஆகியவற்றுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்புகளை அனுமதிக்கும் மூன்றாவது தென் அமெரிக்க நாடாக அர்ஜென்டினா மாறுகிறது. (2020)

## பிரிட்டன் பிரதமரின் இந்திய பயணம் ரத்து.

- உருமாறிய கரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சனின் இந்திய பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.
- நாட்டின் 72—ஆவது குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பிரதமர் போரிஸ் ஜான்சன் பங்கேற்காதது உறுதியாகியுள்ளது.
- ஆண்டுதோறும் ஜனவரி 26—ஆம் தேதி கொண்டாடப்படும் குடியரசு தின விழாவில் வெளிநாட்டு அரசின் தலைவர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்பது வழக்கமாக உள்ளது . கடந்த ஆண்டு நடைபெற்ற குடியரசு தின விழாவில் பிரேசில் அதிபர் சயீர் பொல்சனாரூவும் கடந்த 2019—ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவில் தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமஃபோஸாவும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.
- பிரிட்டனில் உருமாறிய கரோனா நோய்த்தொற்று பரவலின் வேகம் அதிகரித்துள்ளது. அதைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக மீண்டும் பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டுள்ளது. நோய்த்தொற்று பரவலுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக பிரிட்டனில் இருப்பது அவசியம் என்று பிரதமர் போரிஸ் தெரிவித்துள்ளார்.
- இந்திய குடியரசின் 71 ஆண்டு கால வரலாற்றில் 1952, 1953, 1966 ஆகிய ஆண்டுகளில் மட்டுமே சிறப்பு விருந்தினர் இல்லாமல் குடியரசு தின விழா நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
- அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா )2015), ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபே )2014), ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் )2007) உள்ளிட்டோர் நாட்டின் குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றுள்ளது நினைவுகூரத்தக்கது.

## அமெரிக்க ஐக்கிய நாட்டு சட்டப் பேரவை கூடுமிடம்.Capitol

- அமெரிக்க ஐக்கிய நாட்டு சட்டப் பேரவை, பெரும்பாலும் கேபிடல் பில்டிங் என்று அழைக்கப்படுகிறது, இது யுனைடெட் ஸ்டேட்ஸ் காங்கிரஸின் சந்திப்பு இடம் மற்றும் யு.எஸ். மத்திய அரசாங்கத்தின் சட்டமன்ற கிளையின் இருக்கை ஆகும்.
- இந்த கட்டிடம் 1800 இல் கட்டி முடிக்கப்பட்டது.
- கேபிடல் கட்டிடம் வாஷிங்டன், டி.சியில் அமைந்துள்ளது
- தாமஸ் ஜெபர்சன் கேபிட்டலின் வடிவமைப்பை ஒரு பொது போட்டியால் தேர்வு செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார், மேலும் மார்ச் 1792 இல் அமெரிக்க செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வெளிவரத் தொடங்கின.

## சீனா: முதல் தெற்காசிய கரோனா மாநாடு

- வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஹுவா சன்யிங்.
- தெற்காசிய கரோனா மற்றும் வறுமை ஒழிப்பு ஒத்துழைப்பு மாநாடு பெய்ஜிங்கில் முதல்முறையாக நடைபெற்றுள்ளது.
- இந்தியா, பூட்டான் மற்றும் மாலத்தீவுகள் மெய்நிகர் நிகழ்வை தவிர்க்கின்றன
- கூட்டத்தில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், இலங்கை, வங்கதேசம் ஆகிய ஐந்து நாடுகளும் கலந்து கொண்டன.

## ஜி.ஆர்.இ தேர்வு

- ஊரடங்கு உத்தரவு மூலம் மாணவர்களுக்கு ஜி.ஆர்.இ தேர்வை வீட்டிலிருந்து எடுக்க விருப்பம் வழங்கப்பட்ட பின்னர், தெலுங்கானா மற்றும் ஆந்திராவில் மோசடி குற்றச்சாட்டுகள் வெளிவந்துள்ளன.
- ஆர். ரவிகாந்த் ரெட்டி, சுமித் பட்டாச்சார்ஜி மற்றும் பி. சுஜாதா வர்மா ஆகியோர் பயிற்சி நிறுவனங்களின் வலைப்பின்னல் குறித்து அறிக்கை.

**Top 10 nations |** Betweeen 2010 and 2019, India had the highest number of GRE takers in the world outside the U.S. However, among the 10 countries with the most test takers, India had the second lowest mean score between July 2018 and June 2019



| Country | Test takers | Mean score |
|---|---|---|
| U.S. | 42,76,519 | 302.9 |
| India | 8,19,880 | 301.1 |
| China | 6,88,884 | 313.5 |
| Canada | 68,518 | 309.9 |
| South Korea | 63,244 | 311.6 |
| Iran | 54,376 | 301.9 |
| Taiwan | 46,185 | 310.7 |
| Nigeria | 38,018 | 291.2 |
| Japan | 36,920 | 305.9 |
| U.K. | 32,001 | 311.7 |

## தரவு புள்ளி


# Calling the shots

At least 45 countries have begun administering COVID-19 vaccines as of January 6, a rapid rise from only eight nations a fortnight ago. While most of the nations that began vaccination drives have prioritised front-line workers, many have included the elderly and clinically vulnerable groups. Bahrain has adopted a universal vaccination policy. After Israel and the UAE, Bahrain has administered the highest number of doses relative to its population. The Pfizer/BioNTech vaccine is the most popular among the list of approved candidates. By **The Hindu Data Team**


**1. Vaccine policy** | The table classifies countries based on which of the three groups - essential workers, the elderly, and clinically vulnerable - were chosen to receive the vaccine first. While in Singapore, vaccination is available for only one group, in India, all three groups have been chosen. In the UAE, select members outside the three groups are also eligible

| Policy | Countries |
|---|---|
| One | Argentina, Costa Rica, Cyprus, France, Hungary, Norway, Singapore, Slovak Republic, Sweden |
| Two | Belgium, Belarus, Czech Republic, Germany, Denmark, Finland, Guinea, Greece, Iceland, Lithuania, Malta, Oman, Poland, Qatar, U.S. |
| Three | Canada, U.K., Israel, Kuwait, Saudi Arabia, India* |
| Three+ | United Arab Emirates |
| Universal | Bahrain |

**2. Steady climb** | The chart shows the number of countries where at least one person was vaccinated, starting from December 8, 2020. As of January 6, 45 such countries have been added to the list




**3. Doses administered** | The chart depicts the number of vaccine doses administered per 1 lakh people in a country. The graph does not represent the number of people, but the number of doses administered





**4. The makers** | The table lists the different vaccines and countries administering them. Pfizer/BioNTech's vaccine is the most widely administered, with more than 30 countries using it. India will be the second country after the U.K. to use the Oxford-AstraZeneca vaccine, produced here as Covishield

| Vaccine | Countries |
|---|---|
| CNBG | China |
| Moderna | U.S., Canada |
| Pfizer/BioNTech | U.S., U.K., Israel, Italy, France, Spain, Germany, Chile, Mexico, Oman, Saudi Arabia and more |
| Sinopharm | Bahrain, UAE |
| Sinovac | China |
| Sputnik V | Argentina, Russia |
| Oxford-AstraZeneca | U.K. |

*According to the Centre, vaccination will begin on Jan. 16 | Source: Policy data sourced from Oxford Coronavirus Government Response Tracker; Our World in Data

## இந்தோனேசியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: 42 பேர் பலி




- இந்தோனேசியாவின் சுலாவெசி தீவிலுல்ள மேற்கு சுலாவெசி மாகாமம், மமுஜு மாவட்டத்துக்கு 36 கி.மீ. தெற்கே உள்ளூர் நேரப்படி அதிகாலை 2.18 மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.
- ரிக்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் 6.2 அலகுகளாகப் பதிவானது.
- இந்த நிலநடுக்கத்தில் 42 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
- கடந்த 2004–ஆம் ஆண்டில், இந்தோனேசியாவின் சுமத்ரா தீவு அருகே கடல் பகுதியில் ஏற்பட்ட 9.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தின் விளைவாக மிகப் பெரிய சுனாமி ஏற்பட்டது.
- இதில், இந்தியா உள்ளிட்ட இந்தியப் பெருங்கடல் நாடுகளில் 2.3 லட்சம் பேர் உயிரிழந்தனர்.
- அவர்களில் 1.7 லட்சம் பேர் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள்.

## டிரம்புக்கு எதிராக பதவி நீக்க தீர்மானம்:

- தேர்தலில் தோல்வியடைந்த தற்போதைய ஜனாதிபதி டிரம்பின் ஆதரவாளர்கள் நாற்றுக்கணக்கானோர் நாடாளுமன்றத்துக்குள் அத்துமீறி நுழைந்து கடும் வன்முறையில் ஈடுபட்டனர். இந்த வன்முறையை கட்டுப்படுத்த போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 5 பேர் உயிரிழந்தனர்.
- பிரதிநிதிகள் சபையின் தலைவர் நான்சி பெலோசி இந்த தீர்மானத்தை முன்மொழிந்தார். அதனைத் தொடர்ந்து இந்த தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது.
- 25–வது சட்ட திருத்தத்தை அமல்படுத்த துணை ஜனாதிபதி மைக் பென்சை வலியுறுத்தும் இந்த தீர்மானத்தின் மீது ஓட்டெடுப்பு நடந்தது.

- இதில் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த 222 உறுப்பினர்களும், குடியரசுக் கட்சி உறுப்பினர் ஒருவரும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். 205 வாக்குகள் தீர்மானத்துக்கு எதிராக பதிவாகின. அதன்படி 18 வாக்குகள் வித்தியாசத்தில் பிரதிநிதிகள் சபையில் இந்த தீர்மானம் நிறைவேறியது.

**சீனாவில் ஐஸ்கிரீமில் கொரோனா வைரஸ்**

- சீனாவின் பீஜிங் அருகே தியான்ஜினில் தாகியோடோ புட் கோ. லிமிடெட் என்ற பெயரில் ஐஸ்கிரீம் தொழிற்சாலை இயங்கி வருகிறது.
- இந்த தொழிற்சாலைக்கு நியூசிலாந்து, உக்ரைனில் இருந்து பால்பவுடர் உள்ளிட்ட ஐஸ்கிரீம் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் பெறப்படுகிறது.
- இந்த தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீமில் கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளதாக சீன அரசு அறிவித்துள்ளது.

**செனட் உறுப்பினர் பதவி: கமலா ராஜிநாமா**

- கலிஃபோர்னியா மாநிலத்திலிருந்து நாடாளுமன்ற மேலவையான செனட் சபையின் உறுப்பினராக கமலா ஹாரிஸ் தேர்வு செய்யப்பட்டிருந்தார்.
- தற்போது துணை அதிபராகப் பதவியேற்பதற்காக தனது செனட் உறுப்பினர் பதவியை அவர் ராஜிநாமா செய்யவுள்ளார்.
- இரு ஆண்டுகள் பதவிக் காலம் கொண்ட அந்தப் பதவிக்கு கமலா ஹாரிஸுக்கு பதிலாக ஜனநாயக கட்சியை சேர்ந்த அலெக்ஸ் படில்லா என்பவர் நியமிக்கப்படவுள்ளார்.

**8 ஆண்டு குடியுரிமை மசோதா ஜோ பைடன் அறிவிக்க வாய்ப்பு**

- இந்த மசோதாவின்படி, இந்தாண்டு, ஜனவரி 1 நிலவரப்படி, அமெரிக்காவில் சட்டப்பூர்வ அந்தஸ்து இல்லாமல் வசிப்போருக்கு, அவர்கள் ஒழுங்காக வரி செலுத்தியிருந்தால், ஐந்து ஆண்டுகள் தற்காலிகமாக தங்கும் உரிமை வழங்கப்படும்.
- அதுபோல, குறிப்பிட்ட தகுதி உடையோருக்கு, தற்காலிக, 'கிரீன் கார்டு' வழங்கப்படும். ஐந்து ஆண்டு கால முடிவில், அவர்கள் நிரந்தர குடியுரிமை கோர முடிவு செய்தால், மேலும், மூன்றாண்டுகள் குடியுரிமை நீட்டிக்கப்படும்.

ARUL IAS ACADEMY

## ஜோ பைடன் அணி


கேபினட் பதவி
கேபினட்டுக்கு இணையான பதவி
கமலா ஹாரிஸ்
துணை அதிபர்
ஆன்டனி பிளிங்கன்
வெளியுறவுத் துறை
ஜேனெட் யெலன்
நிதித் துறை
லாயட் ஆஸ்டின்
பாதுகாப்புத் துறை
மெரிக் கார்லண்ட
அட்டர்னி ஜெனரல்
மார்டின் வால்ஷ்
தொழிலாளர் நலத் துறை
பீட்டர் பட்டிஜீஜ்
போக்குவரத்துத் துறை
ஜெனிஃபர் கிரான்ஹோம்
எரிசக்தித் துறை
ஜேவியர் பிசேரா
சுகாதாரத் துறை
மார்சியா ஃபட்ஜ
வீட்டு வசதித் துறை
அதிபர் பைடனின் படை...
மேலாண்மை-
பட்ஜெட் அதிகாரி
லிண்டா தாமஸ் கிரீன்ஃபீல்ட்
ஐ.நா.வுக்கான தூதர்
செசிலியா ரூஸ்
பொருளாதார ஆலோசனை
குழு தலைவர்
ஜான் கெரி
அதிபருக்கான பருவ
நிலை விவகாரத் தூதர்
டெப்ரா ஹாலண்ட்
உள்துறை
தாமஸ் வில்சாக்
வேளாண்துறை
ஜினா ரய்மாண்டோ
வர்த்தகத் துறை
வெ. மாளிகை
தலைமை அதிகாரி
வில்லியம் பர்ன்ஸ
சிஐஏ இயக்குநர்
கேதரீன் டாய்
வர்த்தக ஆலோசகர்
மிகுவேல் கர்டோனா
கல்வித் துறை
டென்னிஸ் மெக்டோனோ
முன்னாள் ராணுவத்தினர் நலத் துறை
அலெஜாண்ட்ரோ
மேயார்கஸ்
உள்நாட்டுப் பாதுகாப்பு
ஆவ்ரில் ஹேய்னஸ்
தேசிய புலனாய்வு
இயக்குநர்
மைக்கேல் ரீகன்
சுற்றுசூழல் பாதுகாப்பு
நிர்வாகி
சிறு தொழில் விவகார
நிர்வாகி
ஜேக்கப் சுல்லிவன்
தேசிய பாதுகாப்பு
ஆலோசகர்
தேசிய பொருளாதார
கவுன்சில் இயக்குநர்
சூசன் ரைஸ்
உள்நாட்டு கொள்கை
கவுன்சில் இயக்குநர்
ஜினா மெக்கார்த்தி
உள்நாட்டு பருவகால கொள்கை
ஒருங்கிணைப்பாளர்
கரோனா தடுப்பு
ஒருங்கிணைப்பாளர்
விவேக் மூர்த்தி
சர்ஜன்-ஜெனரல்

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தில் இந்திய—அமெரிக்கர்கள்




## டிரம்ப்பின் முக்கிய முடிவுகள் மாற்றம்: முதல் நாளில் அதிபர் ஜோ பைடன் அதிரடி

- **கரோனா தடுப்பு:** முதலாவதாக, நாட்டில் தீவிரமாகப் பரவி வரும் கரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான 15 அரசாணைகளில் அதிபர் பைடன் கையெழுத்திட்டார். மத்திய அரசுக்குச் சொந்தமான பகுதிகளில் முகக் கவசம் அணிந்து வருவது மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுவதைக் கட்டாயமாக்குவது உள்ளிட்ட அம்சங்கள் அந்த அரசாணைகளில் இடம் பெற்றுள்ளன.இது குறித்து அதிபர் ஜோ பைடன் வெளியிட்டுள்ள சுட்டுரை (டுவிட்டர்) பதிவில், 'நாம் எதிர்கொண்டு வரும் கரோனா நெருக்கடியைப் போக்குவதற்கு இனியும் காலத்தை வீணாக்க முடியாது. இந்த விவகாரத்தில் முன்னாள் அதிபர் டிரம்ப் அரசால் ஏற்பட்ட பின்னடைவுகளிலிருந்து மீள்வதுடன், அந்த நோய்ப் பரவலுக்கு எதிராக நாட்டை முன்னேற்றிச் செல்ல வேண்டியுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.
- **பருவநிலை ஒப்பந்தம்:** அதையடுத்து, பாரிஸ் பருவநிலை ஒப்பந்ததில் அமெரிக்கா மீண்டும் இணைவதற்கான அரசாணையில் அதிபர்ஜோ பைடன் கையெழுத்திட்டார். புவியின் வெப்ப அதிகரிப்பு தொழில்புரட்சிக்கு முன்பிருந்த அளவைவிட 2 டிகிரி செல்ஷியஸுக்கும் குறைவாக இருப்பதற்கு வகை செய்ய ஒப்புக் கொண்டு, பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 2016—ஆம் ஆண்டு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஒப்பந்தம் மேற்கொண்டன. எனினும், அந்த ஒப்பந்தம் சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு சாதகமாகவும் அமெரிக்க நலன்களுக்கு பாதகமாகவும் இருப்பதாகக் கூறி, அதிலிருந்து விலகுவதாக கடந்த 2017—ஆம் ஆண்டு டிரம்ப் அறிவித்தார். அந்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவதற்கான அரசாணையில் தற்போது ஜோ பைடன் கையெழுத்திட்டுள்ளார்.
- **மீண்டும் உலக சுகாதார அமைப்பில்...**கரோனா பிரச்னையில் உலக சுகாதார அமைப்பு சீனாவுக்குச் சாதகமாக நடந்து கொள்வதாகக் குற்றஞ்சாட்டிய டிரம்ப், அதற்குப் பதிலடியாக அந்த அமைப்புக்கு வழங்கி வந்த நிதியுதவியை ரத்து செய்வதாக அறிவித்தார். மேலும், அந்த அமைப்பிலிருந்து அமெரிக்கா விலகுவதாகவும் அறிவித்தார்.

தற்போது அதிபராகப் பதவியேற்றுள்ள ஜோ பைடன், உலகசுகாதார அமைப்பில் மீண்டும் இணைவதற்கான அரசாணையில் கையெழுத்திட்டு, டிரம்ப் அரசு ரத்து செய்த அந்த அமைப்புக்கானநிதியுதவியை மீண்டும் வழங்க உத்தரவிட்டுள்ளார். இத்துடன், மெக்ஸிகோவுடனான எல்லையில் டிரம்ப் அறிவித்திருந்த தேசிய அவசர நிலையை நீக்குவது உள்ளிட்ட பல்வேறு அரசாணைகளில் அதிபர் ஜோ பைடன் கையெழுத்திட்டார்.

## ஜோ பைடனின் 21 நிமிட நம்பிக்கை உரை: வடிவமைத்த இந்திய வம்சாவளி இளைஞர்!

- “இந்த 21 நிமிட உரையில்; எல்லா அமெரிக்க மக்களுக்கும் நான் அதிபர். என் முழு ஆத்மாவும்; அமெரிக்காவை ஒன்றிணைத்தல், மீண்டும் கட்டியெழுப்பவதில் தான் இருக்கிறது. நமது அரசியலமைப்பையும், நமது ஜனநாயகத்தையும் நான் பாதுகாப்பேன்,” என்று முழுக்க முழுக்க நம்பிக்கை வார்த்தைகளை உதிர்த்திருந்தார்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வினய், பைடனின் உரையை தயாரிக்கும் குழுவை வழிநடத்த்தியுள்ளார். பதவியேற்பின் தொடக்க உரை மட்டுமல்ல, பிரச்சாரத்தின் போது பைடன் மற்றும் கமலா ஹாரிஸ் பேசிய உரையும் இவர் தயாரித்து கொடுத்ததுதான்.
- ஒபாமா இரண்டாவது முறையாக அதிபரானபோது பைடன் துணை அதிபராக இருந்தார். அப்போதும் இந்த வினய் ரெட்டி அவர்களின் உரையை வடிவமைக்கும் குழுவில் தலைமை அதிகாரியாக இருந்துள்ளார்.

## மத்திய ஆப்பிரிக்க குடியரசில் அவசரநிலை அறிவிப்பு

- மத்திய ஆப்பிரிக்க குடியரசு (சிஏஆர்) நாட்டில் அரசுக்கும் கிளர்ச்சிப் படையினருக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ளதால், அந்த நாட்டில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.
- அந்த நாட்டில் அண்மையில் நடந்த அதிபர் தேர்தலில் ஃபாஸ்டின்—ஆர்சங்கே டுவடேரா மீண்டும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.
- அரசைக் கவிழ்ப்பதற்காக தலைநகர் பாங்கியின் புகர் பகுதியில் கிளர்ச்சிப் படையினர் கடந்த வாரம் நடத்திய தாக்குதலை ஐ.நா. அமைதிப் படையினர் முறியடித்தனர்.
- இந்தச் சூழலில் 15 நாள்களுக்கு அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவை கட்டுப்படுத்துவதில் “முதல் இடம் பிடித்தது நியூசிலாந்து”

- அவுஸ்திரேலியாவை சேர்ந்த லோவி நிறுவனம் சுமார் 100 நாடுகளின் கொரோனா வைரஸ் நிலையை மதிப்பிடும் ஒரு புதிய தரவினை வெளியிட்டுள்ளது.
- ஒவ்வொரு நாட்டிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை, உறுதிப்படுத்தப்பட்ட இறப்புகள் மற்றும் சோதனை விகிதங்களையும் ஆராய்ச்சியாளர்கள் கருத்திற்கொண்டுள்ளனர்.
- இதில் நியூசிலாந்து முதல் இடத்திலும், வியட்நாம், தைவான் மற்றும் தாய்லாந்து ஆகியவை முறையே இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பிடித்துள்ளன.
- நியூசிலாந்து அதிக மதிப்பெண் 94.4 ஆகவும், வியட்நாம் 90.8 ஆகவும், தைவான் 86.4 ஆகவும், தாய்லாந்து 84.2 ஆகவும் உள்ளது.
- இந்தியா 24.3 மதிப்பெண்களைப் பெற்றது.

# 9.பிற மாநில செய்திகள்

## இளம் தலைமை



- இப்போது நகரக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு பட்டப்படிப்பு மாணவரான ஆர்யா ராஜேந்திரன், நாட்டின் மிக இளைய மேயரானார்.
- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party of India) (முன்னாள்) செயற்பாட்டாளர் கே.ராஜேந்திரன் (எலக்ட்ரீஷியன்) மற்றும் எல்.ஐ.சி முகவரான ஸ்ரீலதா ஆகியோரின் மகள் ஆர்யா All Saints' கல்லூரியில் பி.எஸ்சி கணித இரண்டாம் ஆண்டு மாணவி.
- நகரக் கழகத்தின் முடவன்முகல் வார்டில் இருந்து 2,872 வாக்குகளைப் பெற்றார், போட்டி காங்கிரஸ் வேட்பாளரை விட 549 வாக்குகள் அதிகம்.
- ஒரு கவுன்சிலராக, அவர் தனது வார்டில் ஒரு குடும்ப சுகாதார மையத்தை அமைக்க மற்றும் குழந்தைகள் மத்தியில் மன அழுத்தத்தை குறைக்க திட்டங்களை செயல்படுத்த விரும்புகிறார்.

## காஸிரங்கா தேசிய பூங்காவுக்கு 64,000 சுற்றுலாப் பயணிகள் வருகை

- யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் பூங்கா, ஒற்றைக் கொம்பு உடைய இந்திய காண்டாமிருகங்கள் வசிக்கும் புகழ்பெற்றது.
- கடந்த அக்டோபர் 21ஆம் தேதி திறக்கப்பட்டது முதல் தற்போது வரை காஸிரங்கா தேசிய பூங்கா மற்றும் புலிகள் சரணாலயத்துக்கு 64,100 பேர் வருகை புரிந்துள்ளனர்.
- இந்த 70 நாள்களில் ரூ.1.27 கோடி வருவாய் கிடைத்துள்ளது.
- கடந்த ஆண்டில் இரண்டு காண்டாமிருகங்கள் மட்டுமே வேட்டையாடப்பட்டன.
- வன விலங்குகளின் வாழ்விடங்களான சிரகோவா, பொடாஹி, தேவசுர், ஹால்திபாரி, பந்தேர்துபி, காஸிரங்கா மற்றும் மேலும் 5 இடங்களில் சதுப்பு நிலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## கொச்சி – மங்களூரு இயற்கை எரிவாயு குழாய் திட்டம்

- கடந்த 2009–ஆம் ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.
- கேரள மாநிலம் கொச்சி–கர்நாடக மாநிலம் மங்களூரு இடையிலான இயற்கை எரிவாயு குழாய் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 5 ம் தேதி தொடங்கி வைத்தார்.
- ஒரே நாடு, ஒரே எரிவாயு கட்டமைப்பு திட்டத்தின் முக்கிய மைல்கல்லாக கொச்சி–மங்களூரு இயற்கை எரிவாயு குழாய் திட்டம் கருதப்படுகிறது. 450 கி.மீ. தொலைவுக்கு குழாய் பதிக்கும் இத்திட்டத்தை கெயில் இந்தியா நிறுவனம் மேற்கொண்டுள்ளது.
- இதன் மூலம் ஒரு நாளில் 12 மில்லியன் மெட்ரிக் கியூபிக் மீட்டர் இயற்கை எரிவாயுவைக் கொண்டு செல்ல முடியும்.
- கொச்சியில் இருந்து எர்ணாகுளம், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, கண்ணூர், காசர்கோடு மாவட்டங்கள வழியாக இந்த எரிவாயுக் குழாய் செல்கிறது.
- CNG (compressed natural gas)
- PNG (piped natural gas)
- LNG (liquefied natural gas)
- இந்த வசதி தனது அரசாங்கத்தின் "ஒரு நாடு, ஒரு எரிவாயு கட்டம்" (one nation, one gas grid) கொள்கையின் ஒரு பகுதியாகும் என்று மோடி கூறினார்.

- 30 எரிசக்தி துறையில் இயற்கை எரிவாயுவின் பங்கை 2030 க்குள் தற்போதைய 6% லிருந்து 15% ஆக உயர்த்த திட்டம் இருக்கிறது.
- 5 பெட்ரோலில் அதன் உள்ளடக்கத்தை தற்போதைய 5% லிருந்து 20% ஆக உயர்த்த எத்தனால் உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்படும்.
- உலகின் மிகப்பெரிய கலப்பின எரிசக்தி ஆலை(hybrid energy plant) (காற்று மற்றும் சூரிய) குஜராத்தில் வருகிறது.
- கொச்சி—மங்களூரு குழாய் இணைப்பு மேலும் 21 லட்சம் பி.என்.ஜி இணைப்புகளை வழங்கும்.
- எர்ணாகுலம், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, கண்ணூர் மற்றும் காசர்கோடு மாவட்டங்கள் வழியாக இந்த குழாய் சென்று கர்நாடகாவின் தட்சிணா கன்னட மாவட்டத்தில் மங்களூருவில் முடிகிறது.
- இந்த திட்டம் 2009 ஆம் ஆண்டில் ₹2,915 கோடி செலவில் தொடங்கப்பட்டது, இது 2014ல் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
- கொச்சியில் உள்ள தொழில்துறை மற்றும் உள்நாட்டு நுகர்வோருக்கு ஒரு நாளைக்கு 4 மில்லியன் கன மீட்டர் இயற்கை எரிவாயுவை இந்த குழாய் வழங்குகிறது
- திட்டத்தின் முதல் கட்டம் ஆகஸ்ட் 2013 இல் கொச்சி நகரில் தொடங்கப்பட்டது மற்றும் இந்தியன் ஆயில்—அதானி கேஸ் லிமிடெட் 2016 இல் தொழில்துறை மற்றும் உள்நாட்டு பொருட்களைத் தொடங்கியது.
- ₹4,700 கோடி முதலீட்டில் நிறுவப்பட்ட கொச்சியில் உள்ள எல்.என்.ஜி(LNG) முடியுமிடம் 5 மில்லியன் டன் கொள்ளளவு கொண்டது, மேலும் கெயில் குழாய் திறப்பதன் மூலம் ஆலை 40% தேவையை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறது.

## ஆசிய நீர் பறவைகள் கணக்கெடுப்பு ஆந்திர பிரதேசத்தில் தொடங்குகிறது

- மும்பை இயற்கை வரலாற்று சங்கத்தின் (**Bombay Natural History Society**) (பி.என்.எச்.எஸ்) நிபுணர்களின் உதவியுடன் ஆந்திராவில் இரண்டு நாள் ஆசிய நீர் பறவைகள் கணக்கெடுப்பு 2020 தொடங்கியது.
- Coringa வனவிலங்கு சரணாலயம், கொல்லேறு ஏரி மற்றும் கிருஷ்ணா சரணாலயம் உள்ளிட்ட குறைந்தது இரண்டு டஜன் தளங்களை உள்ளடக்கியது.
- முன்பு கோதாவரி கரையோரத்தில் பறவை பன்முகத்தன்மையை ஆராய்ந்த டாக்டர் சத்தியசெல்வம், கோதாவரி கரையோரத்தில் காணப்பட்ட 90 வகையான பறவைகள் குறித்து ஒரு செயல்விளக்கத்தை முன்வைத்து, கணக்கெடுப்பில் 12 தளங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

## களரிப்பயிற்று அகாடமி தொடங்க நடவடிக்கை

- களரிப்பயிற்று, 3,000 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்துடன், நாட்டின் மிகப் பழமையான தற்காப்புக் கலையாகக் கருதப்படுகிறது.
- இது கோவளத்திற்கு செல்லும் வழியில் கேரள சுற்றுலாவின் வேலார் கிராஃப்ட்ஸ் கிராமத்தில் வரும்.
- பத்மஸ்ரீ மீனாட்சிம்மா தலைமையிலான குருக்களால் வகுப்புகள் இங்கு நடத்தப்படும்.

## ஹைதராபாத்தில் இலவச நீர் திட்டம் தொடங்கப்பட்டது

- தெலுங்கானா நகராட்சி நிர்வாக அமைச்சர் கே.டி. ராமராவ்.
- இங்குள்ள ரஹ்மத் நகரில் இலவச குடிநீர் திட்டத்தால் ஒன்பது லட்சம் குடும்பங்கள் பயனடைவார்கள் என்றார்.

**ஜம்மு—காஷ்மீரில் 150 மீட்டர் நீள சுரங்கப் பாதை கண்டுபிடிப்பு**

- ஜம்மு—காஷ்மீரில் கதுவா மாவட்டம் ஹிரா நகர் செக்டாரில் பயங்கரவாதிகள் தோண்டிய 150 மீட்டர் நீள சுரங்கப் பாதையை எல்லைப் பாதுகாப்புப் படையினர் (பிஎஸ்எஃப்) கண்டுபிடித்தனர்.
- ஜம்மு—காஷ்மீரில், பாகிஸ்தானையொட்டிய எல்லைப்புற மாவட்டம் கதுவா. இந்த மாவட்டத்தில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் சுரங்கப் பாதை தோண்டி அதன் மூலம் இந்தியப் பகுதிக்குள் ஊடுருவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.
- கடந்த ஆண்டு ஆகஸ்ட் 28, நவம்பர் 22 ஆகிய நாள்களில் ஜம்மு—காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் இதுபோன்ற இரண்டு சுரங்கப் பாதைகளை பிஎஸ்எஃப் கண்டறிந்தது குறிப்பிடத்தக்கது.
- ஜம்மு பகுதியில் 2011 முதல் இதுபோன்ற 10 சுரங்கங்களை பி.எஸ்.எஃப் கண்டுபிடித்தது.

**உத்தரப்பிரதேசத்தில் ராமர் கோயில் கட்ட குடியரசுத் தலைவர் ராம்நாத்கோவிந்த் ரூ.5,00,000 நன்கொடை வழங்கியுள்ளார்.**

- உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இந்தக் கோயில் கட்டுவதற்காக நாடு முழுவதும் நன்கொடை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**குஜராத் நதிகள் மிகவும் மாசுபடுகின்றன**

- சபர்மதி மற்றும் மகிசாகரில் கழிவுகள் தொடர்ந்து கொட்டப்படுகின்றன
- சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் (MoEF) தரவுகளின்படி, நாட்டில் மிகவும் மாசுபட்ட நதிகளில் சபர்மதி உள்ளது.
- மிகவும் மாசுபட்ட ஆறுகளைக் கொண்ட முதல் ஐந்து மாநிலங்களில் குஜராத் நான்காவது இடத்தில் உள்ளது, மேலும் மாசுபட்ட பிரிவில் 20 ஆறுகள் உள்ளன.
- மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் (CPCB).
- கிட்டத்தட்ட 4,500 தொழில்துறை நிறுவனங்களின் கழிவுகளை ஆழ்கடலில் வெளியேறும் குழாய் பதிப்பிற்காக ₹2,300 கோடி திட்டத்தை மாநில அரசு முன்மொழிந்துள்ளது
- இந்த திட்டம் மாசுபாட்டின் முக்கிய ஆதாரங்களாக இருக்கும் நான்கு அதிக தொழில் மயமாக்கப்பட்ட மாவட்டங்களுக்கு (அகமதாபாத், வதோதரா, கெடா மற்றும் ராஜ்கோட்) சேவை செய்யும்.

**கேரளத்தில் 2—ஆவது அரசு குடிநீர் உற்பத்தி ஆலை: மாநில முதல்வர் பினராயி விஜயன் திறந்துவைத்தார்**

- கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் உள்ள தொடுபுழையில் அரசு குடிநீர் உற்பத்தி ஆலை செயல்பட்டு வருகிறது.
- திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள அருவிக்கரையில் 2—ஆவது அரசு குடிநீர் உற்பத்தி ஆலை அமைக்கப்பட்டுள்ளது.
- தினந்தோறும் 20 லிட்டர் கொண்ட 2,720 கேன்களில் நீர் நிரப்பும் வசதி கொண்டது அருவிக்கரை குடிநீர் உற்பத்தி ஆலை.
- இங்கு தயாரிக்கப்படும் 20 லிட்டர் தண்ணீர் கேன்கள் அறிமுக சலுகையாக தலா ரூ.20—க்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும்.

## பாஜக எம்.பி. மகேஷ் சர்மா தடுப்பூசி போட்ட முதல் பொது பிரதிநிதியாகிறார்

- இவர் நொய்டா செக்டார் 27—இல் உள்ள தனது கைலாஷ் மருத்துவமனையில் முதல் தடுப்பூசியை போட்டுக் கொண்டதாக மருத்துவமனையின் செய்தித் தொடர்பாளர் வி.பி.ஜோஷி தெரிவித்தார்.
- கௌதம்புத் நகரில் நொய்டா மற்றும் கிரேட்டர் நொய்டா உள்ளிட்ட பகுதிகளில் 6 இடங்களில் தடுப்பூசி போடும் பணி தொடங்கியது.
- கௌதம்புத் நகர் மாவட்டத்தில் 600 சுகாதார ஊழியர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக மாவட்ட தடுப்பூசி திட்ட அதிகாரி டாக்டர் நீரஜ் தியாகி தெரிவித்தார்.
- செக்டார் 30—இல் பிஜிஐ மருத்துவமனை, செக்டார் 27—இல் கைலாஷ் மருத்துவமனை, பாங்கலில் உள்ள சமூக மருத்துவ மையம், பிஸ்ராக்கில் உள்ள சமூக மருத்து மையம், அரசு மருத்துவ அறிவியல் நிலையம் மற்றும் கிரேட்டர் நொய்டாவில் உள்ள சாரதா மருத்துவமனை ஆகிய இடங்களில் தடுப்பூசிகள் போடப்பட்டன.
- முதல் கட்டமாக கௌதம்புத் நகருக்கு 28,840 கோவிஷீல்டு தடுப்பூசிகள் பெறப்பட்டன என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## புதிய கண்டுபிடிப்புகளுக்கான நிதி ஆயோக் தரப் பட்டியலில் 1—வது இடத்தில் கர்நாடகம்

**Best performers**

Four of the five highest scoring major States in the India Innovation Index are from the south

| Rank | Major States | Score |
|---|---|---|
| 1 | Karnataka | 42.5 |
| 2 | Maharashtra | 38.03 |
| 3 | Tamil Nadu | 37.91 |
| 4 | Telangana | 33.23 |
| 5 | Kerala | 30.58 |
| 6 | Haryana | 25.81 |
| 7 | Andhra Pradesh | 24.19 |
| 8 | Gujarat | 23.63 |
| 9 | Uttar Pradesh | 22.85 |
| 10 | Punjab | 22.54 |

- NITI ஆயோக் வெளியிட்ட இந்தியா கண்டுபிடிப்பு குறியீட்டின் இரண்டாம் பதிப்பில் கர்நாடகா முக்கிய மாநிலங்கள் பிரிவில் தனது தலைமை நிலையை தக்க வைத்துக் கொண்டது.
- முதல் 10 இடங்களில் உள்ள மாநிலங்கள் தெலுங்கானா, கேரளா, ஹரியானா, ஆந்திரா, குஜராத், உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாப். மகாராஷ்டிராவைத் தவிர, முதல் ஐந்து இடங்களில் உள்ள அனைத்து மாநிலங்களும் தெற்கில் உள்ளன.
- நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் மற்றும் CEO அமிதாப் கந்த் இதனை வெளியிட்டுள்ளனர்.

## புனே சீரம் இன்ஸ்டிடியூட் தீ விபத்து

- புனேவின் மஞ்சரி பகுதியில் தடுப்பூசி உற்பத்தி செய்யும் பெரிய சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா (எஸ்ஐஐ) இன் கட்டுமான கட்டடத்தின் ஐந்தாவது மாடியில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர்.
- மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார்
- மகாராஷ்டிராவின் முதல்வர் உத்தவ் தாக்கரே
- வெல்டிங் போது தீப்பொறி எரியக்கூடிய பொருட்களில் விழுந்ததால் தீ ஏற்பட்டதாக மாநில சுகாதார அமைச்சர் ராஜேஷ் டோப் தெரிவித்தார்.


## 'சிறைச் சுற்றுலா!' — மகாராஷ்டிரா அரசின் புதிய திட்டம்

- மகாராஷ்டிரா அரசு, மாநிலத்திலுள்ள பழைமையான சிறைகள் குறித்து அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, சிறைச் சுற்றுலா திட்டத்தைத் தொடங்குகிறது.
- மகாராஷ்டிராவில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட ஏராளமான சிறைகள் இருக்கின்றன. இந்தச் சிறைகளை மக்கள் கண்டுகளிக்க வேண்டும் என்பதற்காக சிறைச் சுற்றுலா திட்டத்தை அம்மாநில அரசு தொடங்கவிருக்கிறது. ஜனவரி 26—ம் தேதி சிறைச் சுற்றுலா திட்டம் தொடங்கப்படுகிறது. அன்றைய தினம் முதல்வர் உத்தவ் தாக்கரேயும், துணை முதல்வர் அஜித்பவாரும் சேர்ந்து புனே எரவாடா சிறைச் சுற்றுலாவைத் தொடங்கிவைக்கின்றனர்.
- இரண்டாவதுகட்டமாக நாக்பூர், நாசிக், தானே போன்ற சிறைகளும் பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்துவிடப்பட இருக்கின்றன. புனே எரவாடா சிறையை மாணவர்கள் பார்க்க 5 ரூபாயும், கல்லூரி மாணவர்களுக்கு 10 ரூபாயும், பொதுமக்களுக்கு 50 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படும்.

## பழங்குடியினரின் நில உரிமை, கலாசாரத்தைக் காக்க மத்திய அரசு உறுதி

- அஸ்ஸாமில் விரைவில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில், அந்த மாநிலத்தில் வாழும் 1 லட்சத்துக்கும் அதிகமான பழங்குடியின குடும்பங்களுக்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.
- முதல்வர் சர்வானந்த சோனோவல் தலைமையிலான பாஜக அரசு மாநிலத்தில் ஆட்சியமைத்தபோது 6 லட்சத்துக்கும் அதிகமான பழங்குடியின குடும்பங்களிடம் சொந்த பட்டா இல்லை. அவர்களுக்கு நில உரிமை வழங்குவதற்கான கொள்கையை மாநில பாஜக அரசு கடந்த 2019—ஆம் ஆண்டு வகுத்தது.கடந்த சில ஆண்டுகளில் மட்டும் 2 லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- தற்போது 1 லட்சத்துக்கும் அதிகமான பழங்குடியின குடும்பங்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்.
- மத்திய அரசு செயல்படுத்தி வரும் விவசாயிகளுக்கான உதவித்தொகைத் திட்டம் (PM—கிஸான்), பயிர்க் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்டவற்றின் மூலமாக பழங்குடியினர் பலன்பெற வழிவகை ஏற்பட்டுள்ளது. வங்கிகளிலும் அவர்கள் எளிதில் கடன் பெற முடியும்.
- **முக்கியப் பங்கு:** மத்திய அரசின் 'கிழக்கு நோக்கிச் செயல்படுங்கள்' திட்டத்துக்கு வடகிழக்கு மாநிலங்களே முக்கியப் பங்கு வகித்து வருகின்றன. அஸ்ஸாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களை மேம்படுத்துவதே தற்சார்பு இந்தியா திட்டத்தின் முக்கிய இலக்கு.
- **மத்திய அரசின் திட்டங்கள்:** கரோனா நோய்த்தொற்று பரவல் காலத்தில் கூட நாடு முழுவதும் 1.75 கோடி ஜன் தன் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டன.

**சுந்தரவனகாடுகளில் 428 வகையான பறவைகள் உள்ளன என்று இந்திய விலங்குகள் கணக்கெடுப்பு நிறுவனம் கூறுகிறது**




- உலகின் மிகப்பெரிய சதுப்புநில வனத்தின் ஒரு பகுதியாக விளங்கும் இந்திய சுந்தர்பான்ஸ் 428 வகையான பறவைகள் வசிப்பதாக இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் (ZSI) சமீபத்திய வெளியீடு கூறுகிறது.
- **இந்தியாவின் பறவை மனிதரான சலீம் அலியின்** 125 வது பிறந்த ஆண்டு விழாவை விஞ்ஞானிகளும் இயற்கை ஆர்வலர்களும் அனுசரிக்கின்றனர்
- சுந்தர்பன்ஸ் 1987 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமாக மாற்றப்பட்டது.

**கர்நாடக அரசு ஒவ்வொரு தாலுகாவிலும் 2 மாட்டு முகாம்களை அமைக்கவிருக்கிறது**

